ISSN: 2582–5518




# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ பிப்ரவரி. 22, 2024 சென்னை & புதுக்கோட்டை 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 135 ❖ ரூ.10

*2018-ம் ஆண்டு ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கத்துக்கு எதிரான போராட்டம்*

# தகவல்

## தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு சிபிஐ மேல் விசாரணை நடத்தி வருகிறது ; தமிழக அரசு



சென்னை , பிப். 22-

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவுசெய்யப்பட்டு, சிபிஐ விசாரித்து வருவதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கத்துக்கு எதிராக கடந்த 2018-ம் ஆண்டு மே 22ம் தேதி நடந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராககாவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 13 பேர் கொல்லப்பட்டனர்.இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரிக்கஅமைக்கப்பட்ட நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம், கடந்த 2022ம் ஆண்டுமே 18ம் தேதி தனது அறிக்கையைமுதல்வரிடம் சமர்ப்பித்தது.

அதில், இந்த சம்பவத்துக்குகாரணமான 17 காவல் துறையினர், மாவட்ட ஆட்சியர் உள்பட வருவாய் துறையினர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும், துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும், இழப்பீட்டை அதிகரித்து வழங்கவும் பரிந்துரைத்திருந்தது. ஆணையத்தின் அறிக்கையை ஏற்றுக் கொண்ட அரசு, அதிகாரிகளுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மட்டும் எடுப்பது எனவும், ஏற்கெனவே வழங்கப்பட்ட தலா 20 லட்சம் ரூபாய் இழப்பீடே போதுமானது எனவும் கூறி, கடந்த 2022ம் ஆண்டு அக்டோபர் 17ம் தேதி அரசாணை பிறப்பித்தது.

இந்த அரசாணையை எதிர்த்து தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டில் பலியான 17 வயது இளம் பெண் ஸ்னோலின் என்பவரின் தாய் வனிதா சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில்,"நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் பரிந்துரைத்தும், அமைதியான முறையில் போராடியவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய காவல் துறை மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் மீது கொலை குற்றச்சாட்டின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்படவில்லை.

ஆணையத்தின் பரிந்துரை அடிப்படையில் நடவடிக்கை எடுத்து சட்டமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என ஐந்து ஆண்டுகள் காத்திருந்தநிலையில்,சட்ட விதிகளுக்கு முரணாக அரசு, இயந்திரத்தனமாக செயல்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் சம்பந்தப்பட்டதாகநீதிபதி அருணா ஜெகதீசன் ஆணைய பரிந்துரைப்படி காவல் துறையினர், வருவாய் துறையினர் மீது கொலை வழக்கு பதியவும், பலியானோர் குடும்பங்களுக்கு தலா ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்கவும் அரசுக்கு உத்தரவிட வேண்டும். எதிர்க்கட்சி தலைவராக மு.க.ஸ்டாலின் இருந்தபோது ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டுமென வலியுறுத்தினார் என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசுத்தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன், மனுவில் முன் வைக்கப்பட்டுள்ள அனைத்துகோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு சிபிஐ மேல் விசாரணை நடத்தி வருகிறது எனக் கூறி பதில்மனு தாக்கல் செய்தார்.

இது தொடர்பாக மனுதாரர் தரப்பில் பதிலளிக்க அவகாசம் கோரியதை அடுத்து, விசாரணையை ஏப்ரல் 5-ம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

**விசாரணை ஒத்திவைப்பு:**

இதனிடையே, இந்தச் சம்பவம் தொடர்பாக தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த வழக்கை தேசிய மனித உரிமை ஆணையம் முடித்து வைத்ததை எதிர்த்து மனித உரிமை ஆர்வலர் ஹென்றி திபேன் தாக்கல் செய்திருந்த மனு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர் மற்றும் செந்தில்குமார் அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டவர்கள் தரப்பில்பதில்மனுதாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்தனர்.

## டெல்லி சலோ போராட்டத்தில் கண்ணீர் புகை குண்டு வீசி விவசாயிகளைத் தடுத்த ஹரியாணா போலீஸார்



புதுடெல்லி, பிப். 22-

பஞ்சாப் - ஹரியாணா எல்லையில்போராட்டம் நடத்தி வரும் விவசாயிகள் 'டெல்லி சலோ' பேரணியை நேற்று மீண்டும் தொடங்கியபோது அவர்களைத் தடுத்து நிறுத்த ஹரியாணா போலீஸார் விவசாயிகள் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். இதனால் மீண்டும் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

வேளாண் விஞ்ஞானி சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரைகளின்படி 23 வகையான பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்க வேண்டும். இதை உறுதி செய்து சட்டம் இயற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 13-ம் தேதி முதல் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஷம்பு எல்லையில் விவசாயிகளின் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நில அகழ்வு இயந்திரங்கள் மற்றும் புல்டோசர்கள் உரிமையாளர்களுக்கு ஹரியாணா போலீஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,"பொக்லைன்ஸ் மற்றும் ஜேசிபி உரிமையாளர்கள் மற்றும் அவற்றை இயக்கும் தொழிலாளர்களே நீங்கள் போராட்டக் காரர்களுக்கு உங்களின் உபகரணங்களை உபயோகித்து உதவி செய்ய வேண்டாம்.

உங்களுடைய இயந்திரங்களை போராட்டக் களத்தில் இருந்து வெளியே எடுத்துச் செல்லுங்கள். அவைகள் பாதுகாப்பு படையினருக்கு எதிராகவும், அவர்களைக் காயப்படுத்தவும் பயன்படுத்தப்படலாம். அது ஜாமீனில் வெளியே வரமுடியாதகுற்றமாகும். மேலும் நீங்களும் கிரிமினல் குற்றத்துக்கு ஆளாகலாம்" என்று தெரிவித்துள்ளது.

இதனிடையே விவசாய சங்கத் தலைவர் சர்வான் சிங் பாந்தர் கூறுகையில், "இளைஞர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் யாரும் இப்போது முன்னேற வேண்டாம். விவசாயத் தலைவர்கள் மட்டும் டெல்லி நோக்கி முன்னேறுகிறோம்.

நாங்கள் யாரையும் தாக்கப் போவதில்லை. நாங்கள் வெறுங்கையுடன் செல்கிறோம். நாங்கள் டெல்லியில் மத்திய அரசை முடிவு எடுக்கச் சொல்லி வலியுறுத்துவோம். அரசாங்கம் எங்களை கொலை கூட செய்யட்டும். ஆனால் எங்களை அடக்குமுறைக்கு உள்ளாக்க வேண்டாம். குறைந்தபட்ச ஆதார விலைக்கு சட்டபூர்வ அங்கீகாரத்தை அறிவித்து பிரதமர் இந்தப் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதுதான் எங்களின் வேண்டுகோள். விவசாயிகளை ஒடுக்கும் அரசாங்கத்தை தேசம் ஒருபோதும் மன்னிக்காது" என்றார்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகத்தில், "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, அனைத்துத்துறை அரசு உயர் அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, தனி மாவட்ட வருவாய் அலுவலர்கள் சரவணன் (நெடுஞ்சாலை நிலமெடுப்பு), ரம்யாதேவி (காவிரி-வைகை-குண்டாறு), அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## "திமுக கூட்டணியில் இருந்து எத்தனை கட்சிகள் வெளியே செல்கிறார்கள் என பொறுத்திருந்து பாருங்கள்" – இபிஎஸ்



மதுரை : பிப். 22-

"திமுகவில் கூட்டணி குறித்து தற்போது வரை பேசிக்கொண்டுதான் வருகின்றனர். இன்னும், கூட்டணி பேச்சுவார்த்தை முடிவாகவில்லை. திமுக கூட்டணியில் இருந்து எத்தனை கட்சிகள் வெளியே செல்கிறார்கள் என பொறுத்திருந்து பாருங்கள்" என்று இபிஎஸ் கூறினார்.

நிர்வாகி ஒருவரின் இல்ல நிகழ்ச்சியில் பங்கேற்க அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை வந்தார். அப்போது விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியது, "முதல்வர் மு.க.ஸ்டாலின் மதுரைக்கு என அறிவித்த பல்வேறு திட்டங்கள் இதுவரையிலும் செயல்பாட்டுக்கு வரவில்லை. டைடல் பார்க் அறிவிப்பு வெளியிடப்பட்டு இரண்டு ஆண்டாகிய நிலையில், அதற்கு நிதி ஒதுக்கி பணியை தொடங்கவில்லை. மதுரை விமான நிலையம் ஓடுதளம் விரிவாக்கம், மெட்ரோ ரயில் திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளன. மதுரைக்கு குடிநீர் திட்டம் அதிமுக ஆட்சியில் தொடங்கினோம். இதற்கான பணிகளும் சுணக்கமாகவே உள்ளது.

பாஜகவில் இருந்து பலரும் அதிமுகவில் இணைகின்றனர். ஒரு கட்சியில் இருந்து மற்றொரு கட்சிக்கு மாறுவது அவர்களது ஜனநாயகம். போகின்றவர்களை யாரும் தடுக்க முடியாது. இது ஜனநாயக நாடு. கட்சி மாறுவது அவரவர் மன நிலையை பொறுத்தது. விருதுநகரில் ஜவுளி பூங்காவுக்கு அதிமுக ஆட்சியில் அடிக்கல் நாட்டப்பட்டது. எங்களது ஆட்சியில் நாங்கள் கொண்டு வந்த திட்டத்துக்கு திமுக அரசு 'ஸ்டிக்கர்' ஒட்டுகிறது.

தேர்தலில் வேட்பாளருக்கு ஒதுக்கப்படும் 'சீட்' அடிப்படையில் வாரிசு அரசியலை தீர்மானிக்க முடியாது. திமுகவில் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள்தான் அதிகாரத்தில் இருக்கின்றனர். அது கட்சி அல்ல. ஒரு கம்பெனி. தலைமைக்கு யார் வருகின்றனர் என்பதை பொறுத்துதான் முடிவாகும். திமுகதான் வாரிசு அரசியல் செய்கிறது. அது ஒரு குடும்பக் கட்சி. திமுக தலைவர் கருணாநிதி, அவரது மகன் ஸ்டாலின், அதற்கு பிறகு அவரது மகன் உதயநிதி... இதற்கு பெயர்தான் வாரிசு அரசியல். ஒரே குடும்பத்தின் கையில் ஒரு கட்சி இருக்கிறது.

ஒரு குடும்பத்தின் கைக்குள் ஒரு கட்சி போகக் கூடாது என்பதுதான் எங்களது கொள்கை. அதிமுகவில் சாதாரண தொண்டன் என்னை போன்று உயர்ந்த பொறுப்புக்கு வரமுடியும். தேர்தல் அறிவித்த பின்னரே கூட்டணி குறித்து முடிவாகும். மக்களவைத் தேர்தலில் பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்திதான் வாக்கு கேட்க வேண்டும் என்பதில்லை. பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்த வேண்டும் என்ற அவசியமும் இல்லை. கடந்த 2014-ல் ஜெயலலிதா, பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்தி வாக்கு கேட்கவில்லை" என்றார்.

த்ரிஷா மீதான அவதூறு பேச்சு குறித்து கேட்டதற்கு, "வேறு கட்சியிலிருந்து வந்தவர் ஏ.வி.ராஜூ. உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவரை கட்சியில் வைத்திருந்தோம். கட்சியின் கட்டுப்பாடு, விதிகளை மீறியதால் ஏ.வி. ராஜூ ஏற்கெனவே கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். அவர் கூறுவதை எல்லாம் பெரிது படுத்தக் கூடாது. பதவி இல்லாத விரக்தியில் அவர் பேசுகிறார்" என்றார்.

சசிகலா, ஓபிஎஸ் காரில் அதிமுக கொடிகட்டி பயணிப்பதாக கேட்டதற்கு, "அவர்களின் காரில் அதிமுக கொடி கட்டி இருக்கும் ஆதாரங்களை வழங்குங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்றார்.

தொடர்ந்து அவர் கூறும்போது, "திமுகவில் கூட்டணி குறித்து தற்போது வரை பேசிக்கொண்டு தான் வருகின்றனர். இன்னும், கூட்டணி பேச்சுவார்த்தை முடிவாகவில்லை. திமுக கூட்டணியில் இருந்து எத்தனை கட்சிகள் வெளியே செல்கிறார்கள் என பொறுத்து இருந்து பாருங்கள். இரட்டை இலை சின்னத்தை முடக்க முடியாது. உச்ச நீதிமன்றம், உயர்நீதி மன்றம் தீர்ப்புக்கு பிறகும் ஓபிஎஸ் ஆசை நிறைவேறாது.

மேகேதாட்டு விவகாரத்தில் அதிமுக அரசு நீதிமன்ற அவதூறு வழக்கு போட்டது. இந்த விவகாரத்தில் திமுக அரசுக்கு திராணி இருந்தால் வழக்கு போட சொல்லுங்கள். மேகேதாட்டு அணை விவகாரத்தில் துரோகம் செய்தது திமுக அரசு. இப்பிரச்னையில் எங்கு எதை பேசவேண்டுமோ, அதை பேச திமுக அரசு தவறிவிட்டது.

தமிழகத்தில் விலைவாசி உயர்வு, சொத்து வரி, மின் கட்டணம் மற்றும் சட்டம் - ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. மக்கள் திமுக அரசின் மீது கொந்தளிப்பாக உள்ளனர். இதே ஆட்சி தொடர்ந்தால் ஆண்டவனாலும் கூட தமிழகத்தை காப்பாற்ற முடியாது" என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

## செந்தில் பாலாஜி ஜாமீன் கோரிய வழக்கை தீர்ப்புக்காக ஒத்திவைத்தது சென்னை உயர் நீதிமன்றம்



சென்னை, பிப். 22-

சட்டவிரோத பணப் பரிமாற்ற தடை சட்ட வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி ஜாமீன் கோரி தாக்கல் செய்த வழக்கை தேதி குறிப்பிடாமல் தீர்ப்புக்காக சென்னை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

செந்தில் பாலாஜி மீது சட்டவிரோத பண பரிமாற்றம் செய்ததாக அமலாக்கத் துறை வழக்கு பதிவு செய்து கடந்த ஜூன் 14ம் தேதி கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, அதன் நகலும் செந்தில் பாலாஜிக்கு வழங்கப்பட்டுள்ளது. சென்னை புழல் சிறையில் நீதிமன்ற காவலில் அவர் வைக்கப்பட்டுள்ளார். ஏற்கெனவே, அவரது ஜாமீன் மனுக்களை சென்னை முதன்மை அமர்வுநீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் நிராகரித்த நிலையில், 2-வது முறையாக ஜாமீன் கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்த போது, செந்தில் பாலாஜி தரப்பு வாதங்களுக்கு பதிலளித்து அமலாக்கத் துறை தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன் வாதிட்டார். இதையடுத்து செந்தில் பாலாஜி தரப்பு பதில் வாதத்துக்காக வழக்கு விசாரணை ஒத்திவைக்கப் பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது செந்தில் பாலாஜி தரப்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர் ஆர்யமா சுந்தரம், அமலாக்கத் துறை முன்வைத்த ஆதாரங்களில் முன்னுக்குபின் முரண்பாடுகள் உள்ளன. செந்தில் பாலாஜி வீட்டில் கைப்பற்றியதாக கூறிய ஆதாரங்களை, தற்போது மாநகர போக்குவரத்துக் கழக அலுவலகத்தில் இருந்து பெற்றதாக தெரிவிக்கின்றனர்.

செந்தில் பாலாஜிக்கு எதிராக 30 வழக்குகள் உள்ளதால் அவருக்கு ஜாமீன் வழங்கக் கூடாது என அமலாக்கத் துறை தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. போராட்டங்கள் நடத்தியது, அப்போதைய முதல்வருக்கு எதிராக கோஷமிட்டது, கொரோனா விதிகளை மீறியது, என அரசியல் காரணங்களுக்காக தொடரப்பட்ட வழக்குகள் அவை .

இந்த 30 வழக்குகளில், 21 வழக்குகள் ரத்து செய்யப்பட்டு விட்டன. போக்குவரத்து துறையில் வேலை வாங்கி தருவதாக மோசடி செய்ததாக தொடரப்பட்ட மூன்று வழக்குகள் தவிர, மீதமுள்ள ஆறு வழக்குகள், போஸ்டர் ஒட்டியது, முதல்வருக்கு எதிராக கோஷம் எழுப்பியது தொடர்பான வழக்குகள்தான்.

எனவே, 30 வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளதாக அமலாக்கத் துறை முன் வைத்த வாதம் தவறு. மேலும், கரூரில் சோதனைக்கு சென்ற வருமான வரித்துறை அதிகாரிகளை தாக்கிய வழக்குக்கும், செந்தில் பாலாஜிக்கும் எந்த தொடர்பும் இல்லை.

வேலை வாங்கித் தருவதாக 67 கோடி ரூபாய் வசூலித்து மோசடி செய்ததாக அமலாக்கத்துறை கூறும் குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்கள் இல்லை. புலன் விசாரணை முடிந்து விட்டதாக அமலாக்கத் துறையினரே கூறுகின்றனர். அமலாக்கத் துறை ஆதாரங்கள் சந்தேகத்துக்கு இடமானவை. செந்தில் பாலாஜி தற்போது அமைச்சராக இல்லை. நீண்டகாலம் சிறையில் உள்ள அவருக்கு ஜாமீன் வழங்க வேண்டும். நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்கத் தயார் என வாதிட்டார்.

அமலாக்கத் துறை தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், 2,700 பதவிகளுக்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட்டனர். ஒவ்வொரு நாளும் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்ற விவரங்கள் பென் டிரைவில் உள்ளன. எந்த ஆதாரங்களும் ஜோடிக்கப்படவில்லை. 67 கோடி ரூபாய் வசூலித்தது தொடர்பான அனைத்து ஆதார ஆவணங்களும் சிறப்பு நீதிமன்றத்தால் சான்றளிக்கப்பட்ட உண்மை ஆவணங்கள்.

செந்தில் பாலாஜி அமைச்சராக இல்லாவிட்டாலும், எம்எல்ஏவாக நீடிக்கிறார். ஜாமீன் மனு விசாரணைக்கு வந்ததால் தான் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். அதை அரசு உடனடியாக ஏற்றுக் கொண்டதில் இருந்து அவர் செல்வாக்கான நபர் என்பது தெளிவாகிறது. சாட்சிகள் அச்சுறுத்தப்பட மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பதால் ஜாமீன் வழங்க கூடாது. அவரது மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனு மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

# இன்று



22-2-24

சோமுலந்தாள் முலநாதர் சுவாமி கோயில் - உடல் ஆரோக்கியம் பெறும்.
சக வருடம் 1945 பால்குன 03

| சோபகிருது மாசி 10 | FEB - THU வியாழன் | ஷஃபான் 11 வளர்பிறை 053 / 313 | இராசிபலன் |
|---|---|---|---|

வளர். திரயோதசி 21.45 (மா. 03.14) பூசம் 29.45 (மா. 06.26) தியாஜ் 00.00 அமிர்த 29.45 மேல் சித்த. சுபமுகூர்த்தம். வராக கல்பாதி. குடந்தை ஸ்ரீசக்கரபாணி சூர்ணாபிஷேகம். காரமடை ஸ்ரீஅரங்கநாதர், மதுரை ஸ்ரீஇன்மையில் நன்மை தருவார் இத்தலங்களில் திருக்கல்யாணம்.

| | நல்லநேரம் | கௌரி.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 10.30-11.30 | 12.30-1.30 | 01.30 | 09.00 | 06.00 |
| மாலை | ------ | 6.30-7.30 | 03.00 | 10.30 | 07.30 |


சூலம் : தெற்கு; பரிகாரம் : தைலம் — கும்ப லக்னம் இருப்பு நா. 3 வி. 19 — சந்திராஷ்டமம் கேட்டை மூலம்
கரணம் : 3-4.30 — சூரிய உதயம் : 6.32

நுரைகூடம் தளும்பும், நிறைகுடம் நீர் தளும்பாது

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | இன்பம் |
| மிதுனம் | நட்பு |
| கடகம் | நலம் |
| சிம்மம் | ஜெயம் |
| கன்னி | களிப்பு |
| துலாம் | பரிசு |
| விருச்சி | செலவு |
| தனுசு | கவலை |
| மகரம் | உயர்வு |
| கும்பம் | பிரீதி |
| மீனம் | முயற்சி |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

"உங்களுக்குள் நீங்கள் நல்ல சமநிலையுடன் இருக்கும்போது மட்டும்தான், உங்கள் புத்திசாலித்தனம், திறமை மற்றும் ஆற்றல் முழுமையாக வெளிப்படும்."


| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.5,780 | Rs. 6,250 |


# உரத் தொழிற்சாலையில் வாயு கசிவு ரூ.6 கோடி இழப்பீடு கேட்டு நோட்டீஸ்

சென்னை : பிப். 22-

எண்ணூரில் உள்ள தனியார் உரத் தொழிற்சாலையில் அமோனியா வாயு கசிவு ஏற்பட்டது குறித்து வேல்முருகன், ஜெகன்மூர்த்தி, எம்.எச்.ஜவாஹிருல்லா உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் எம்.எல்.ஏ.க்கள் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசினார்கள்.



இதற்கு சுற்றுச்சூழல் கால நிலை மாற்றுத்துறை அமைச்சர் சி.வி.மெய்யநாதன் தாக்கல் செய்த விவர அறிக்கையில் கூறி இருந்ததாவது:- இந்த உரத்தொழிற்சாலையில் ஏற்பட்ட அமோனியா வாயு கசிவினால் அங்கு குடியிருப்பு பகுதிகளில் வசித்த மக்களுக்கு கண் எரிச்சல், தோல் அரிப்பு, மூச்சுவிடுவதில் சிரமம் போன்ற உபாதைகள் ஏற்பட்டன.

வாயு கசிவை கண்டறிந்ததும் 20 நிமிடங்களில் குழாயில் ஏற்பட்ட வாயு கசிவு முற்றிலும் நிறுத்தப்பட்டது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் தொழிற்சாலையை ஆய்வு செய்து உர உற்பத்தியை நிறுத்த உத்தரவிட்டனர். அதன்படி உற்பத்தி நிறுத்தப்பட்டது. தற்போது விசாரணை குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 பிரிவு 5-ன் கீழ் சுற்றுச்சூழல் இழப்பீடாக 5 கோடியே 92 லட்சத்து 50 ஆயிரத்து 888 ரூபாயை அந்த உர நிறுவனத்திடம் இருந்து ஏன் வசூலிக்க கூடாது என விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# விவசாயிகளுக்கு தமிழ்நாடு செய்ததில் 10% கூட மத்திய அரசு செய்யவில்லை : கமல்ஹாசன் குற்றச்சாட்டு

சென்னை : பிப். 22-

மக்கள் நீதி மய்யத்தின் 7-ம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி சென்னை அலுவலகத்தில் அக்கட்சியின் தலைவர் கமல்ஹாசன் கொடியேற்றினார்.



பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர்; என் சொந்த காசை வைத்து கட்சி நடத்துகிறேன். முழு நேர அரசியல்வாதி என யாரும் இல்லை; முழு நேர அப்பனும் இல்லை; பிள்ளையும் இல்லை. 30 ஆயிரம் பேர் ஓட்டு போடாததால் நான் கோவையில் தோற்றேன். அனைவரும் வாக்களிக்க வேண்டும்; அரசியலில் விட்டு என்னை போக வைக்க முடியாது. ஓட்டு போடாதவர்கள் முழு நேர குடிமகன்கள் இல்லை. நாட்டு மக்களின் குடியுரிமையே ஆட்டம் கண்டுள்ளது.

விவசாயிகளுக்கு தமிழ்நாடு செய்துள்ள நன்மையில் 10% கூட மத்திய அரசு செய்யவில்லை. விவசாயிகளை தடுக்க ஆணி படுக்கையை சாலையில் போட்டுள்ளது மத்திய அரசு. தெற்கு தேய்ந்தால் கூட பரவாயில்லை என்று நினைப்பவர்கள் தான் மத்தியில் ஆட்சியில் உள்ளார்கள். மாநிலங்களுக்கு சமமான வரிப்பகிர்வு அவசியம். தேர்தல் பத்திரம் மூலம் யாரிடமும் காசு வாங்கவில்லை. அரசியலுக்கு வந்துள்ள நடிகர் விஜயுடன் ஏற்கனவே பேசியிருக்கிறேன். கட்சி அரசியலை தாண்டி நாட்டு நலன் பற்றி சிந்திக்க வேண்டிய நேரம் இது.

கூட்டணி குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். கூட்டணி இறுதியானவுடன் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும். கூட்டணி குறித்து தான் மட்டும் தனியாக சொல்ல முடியாது, மற்ற கட்சிகளுடன் கலந்து ஆலோசித்துவிட்டுதான் கூற முடியும் என்று கூறினார்.

# மோடி மீதான பயத்தில் கதறுகிறது திமுக – குஷ்பு

சென்னை:பிப்.22, தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி இந்த தேர்தலுக்கு பிறகு மோடி ஆயுள் தண்டனை பெறுவார். இதுவரை 400-க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கி இருக்கிறார்கள். புதுவைக்கு வரும் கவர்னர்களிடம் சொத்துக்கணக்குகள் கேட்க வேண்டும் என்று கடுமையாக விமர்சித்தார்.

இது தொடர்பாக பா.ஜனதா தேசிய செயற்குழு உறுப்பினரும் மகளிர் ஆணைய உறுப்பினருமான நடிகை குஷ்பு கூறியதாவது- விலை கொடுத்து வாங்கி பழக்கப்பட்டவர்களுக்கு அந்த எண்ணம் தான் வரும். இன்று ஜெயிலில் இருக்கும் செந்தில் பாலாஜி முதல் பெரும்பாலானவர்கள்



அ.தி.மு.க.வில் இருந்து தி.மு.க.வுக்கு சென்றவர்கள். அவர்களை எவ்வளவு விலை கொடுத்து வாங்கினார்கள் என்பதையும் வெளியிட்டால் நல்லது.

மற்றவர்களின் சொத்துக்கணக்கை கேட்க ஆசைப்படும் தி.மு.க.வினர் முதலில் அவர்களது பின்புலத்தையும் இப்போதைய சொத்துக்களையும் பற்றி நினைத்துப்பார்க்க வேண்டும். ஊழலில் ஊறிப்போன தி.மு.க. பா.ஜனதாவை பார்த்து விரல் நீட்ட கூட தகுதியற்ற கட்சி. லாலுபிரசாத் யாதவ் ஊழல் செய்து ஜெயிலுக்கு சென்றவர். வடகிழக்கு மாநிலத்தில் ஒரே ஒரு எம்.எல்.ஏ. வீட்டில் ஒரு 350 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இப்படி நாடு முழுக்க ஊழல் செய்பவர்களோடு கூட்டணி அமைத்து மக்களிடம் ஓட்டு கேட்க போகிறார்கள்.

எப்படி மக்கள் ஆதரிப்பார்கள். ஊழலை ஒழிக்க போராடுகிறார் மோடி. அவர் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தங்கள் நிலைமை என்ன ஆகுமோ? என்ற பயத்தில் தான் இப்படி கதறுகிறது. தி.மு.க. தேர்தல் நெருங்க நெருங்க தி.மு.க.வினருக்கு பயமும் அதிகரித்து வருகிறது என்று கூறினார்.

### சைக்கிள் சின்னம் எங்களுக்கே

# தேர்தல் ஆணையத்தை எதிர்த்து ஜி.கே.வாசன் வழக்கு





சென்னை : பிப். 22-

மக்களவை பொதுத்தேர்தலில் தங்களுக்கு சைக்கிள் சின்னம் ஒதுக்கக்கோரி தமிழ் மாநில காங்கிரஸ் தாக்கல் செய்த மனுவுக்கு பதிலளிக்கும்படி இந்திய தேர்தல் ஆணையத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 1996-ம் ஆண்டு மூத்த அரசியல் தலைவர் ஜி.கே.மூப்பனாரால் தமிழ் மாநில காங்கிரஸ் எனும் கட்சி தொடங்கப்பட்டது. இந்தக் கட்சிக்கு சைக்கிள் சின்னத்தை தேர்தல் ஆணையம் அப்போது ஒதுக்கியது. ஜி.கே. மூப்பனார் மறைவுக்கு பிறகு தற்போது ஜி.கே.வாசன், தமாகா தலைவராக உள்ளார். இதனிடையே தொடர் தோல்வி மற்றும் வாக்கு வங்கி சரிவு போன்ற காரணங்களால், சைக்கிள் சின்னம் திரும்பப் பெறப்பட்டது.

இந்நிலையில், மக்களவைத் தேர்தலில் தமாகாவுக்கு மீண்டும் சைக்கிள் சின்னம் ஒதுக்கக்கோரி, ஜி.கே.வாசன், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். அதில், 'எதிர்வரும் மக்களவை தேர்தலில் தங்களது கட்சிக்கு சைக்கிள் சின்னம் ஒதுக்கக்கோரி கடந்த 6ம் தேதி தேர்தல் ஆணையத்திடம் மனு அளித்தோம். அடுத்த நான்கு வாரங்களில் எப்போது வேண்டுமானாலும் தேர்தல் அறிவிக்கலாம் என்ற நிலையில், தங்களது மனு மீது இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

2019-ம் ஆண்டு பொதுத்தேர்தலை போல இந்த தேர்தலுக்கும் தங்களது கட்சிக்கு சைக்கிள் சின்னம் வழங்க உத்தரவிட வேண்டும்' என கோரிக்கை வைத்துள்ளார் வாசன். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஆர். மகாதேவன், முகமது ஷஃபிக் அமர்வு, இந்த மனுவுக்கு பதிலளிக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டு மறு விசாரணையை நாளை ஒத்தி வைத்தனர்.

### மக்களவை தேர்தலில் எனது மகனுக்கு சீட் கேட்பது வாரிசு அரசியல் இல்லை

# 2014 தேர்தலில் ஜெயவர்தன் போட்டியிட கையெழுத்திட்டவர் ஜெயலலிதா – ஜெயக்குமார் விளக்கம்

சென்னை : பிப். 22-

மக்களவை தேர்தலில் எனது மகனுக்கு சீட் கேட்பது வாரிசு அரசியல் இல்லை என்று அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

மக்களவை தேர்தலை முன்னிட்டு அதிமுக-வில் நேற்று முதல் விருப்ப மனு விநியோகம் தொடங்கியுள்ளது. சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் நேற்று முதல் மார்ச் 1ம் தேதி வரை விருப்ப மனு விநியோகிக்கப்படுகிறது. இதில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரின் மகன் ஜெயவர்தன் தென்சென்னை தொகுதியில் போட்டியிட விருப்ப மனு பெற்றுள்ளார். இது தொடர்பாக முன்னாள்



அமைச்சர் ஜெயக்குமார் கூறியதாவது; மக்களவை தேர்தலில் எனது மகனுக்கு சீட் கேட்பது வாரிசு அரசியல் இல்லை. 2014 தேர்தலில் ஜெயவர்தன் போட்டியிட கையெழுத்திட்டவர் ஜெயலலிதா; அதனால் இது வாரிசு அரசியலில் வராது என்றார்.


அதிமுகவில் பற்று உள்ளவர்கள் வேறு கட்சிக்கு செல்ல மாட்டார்கள். அதிமுகவில் உள்ளவர்களுக்கு வலை வீசி ஆள்பிடிக்கும் வேலையை பா.ஜ.க. செய்து வருவதாக ஜெயக்குமார் குற்றச்சாட்டியுள்ளார். பூச்சாண்டியை போல மிரட்டி ஆள்பிடிக்கும் வேலையில் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை ஈடுபட்டு வருகிறார். பழனிசாமி, திரிஷா குறித்து பேசிய முன்னாள் நிர்வாகி ஏ.வி.ராஜு மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். நடிகை திரிஷா குறித்து ஏ.வி.ராஜு குறித்த கருத்துகளை ஏற்க முடியாது. அதிமுக கூட்டணி குறித்து உரிய நேரத்தில் அறிவிப்பு வெளியாகும். தேர்தலுக்கு இன்னும் ஒரு மாத காலம் இருக்கிறது; கடைசி நிமிடத்தில் கூட எதுவும் நடக்கும் என்று ஜெயக்குமார் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

# திமுக எம்எல்ஏ மகன், மருமகள் ஜாமீன் கோரிய வழக்கில் பாதிக்கப்பட்ட பெண் உயர் நீதிமன்றத்தில் ஆஜர்

சென்னை : பிப். 22-

வீட்டில் பணிபுரிந்த பணிப்பெண்ணை சித்ரவதை செய்து துன்புறுத்தியதாக கைது செய்யப்பட்ட பல்லாவரம் திமுக எம்எல்ஏ கருணாநிதியின் மகன் மற்றும் மருமகள் ஜாமீன் கோரி தாக்கல் செய்த வழக்கில், பாதிக்கப்பட்ட பணிப்பெண் சென்னை உயர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.

வீட்டில் பணிபுரிந்த பணிப்பெண்ணை சித்ரவதை செய்து துன்புறுத்தியதாக பல்லாவரம் திமுக எம்எல்ஏ கருணாநிதியின் மகன் ஆண்டோ மதிவாணன் மற்றும் மருமகள் மெர்லினா ஆகியோரை நீலாங்கரை அனைத்து மகளிர் போலீஸார் ஆந்திராவில் கைது செய்தனர். இருவரும் நீதிமன்ற காவலில் புழல் சிறையில்



அடைக்கப்பட்டுள்ளனர்.

இருவரும் ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனுவை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதையடுத்து, இருவரும் ஜாமீன் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு கடந்தமுறை விசாரணைக்கு வந்தபோது, மனுவுக்கு காவல் துறை மற்றும் பாதிக்கப்பட்ட பெண் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிட்டார். மேலும், பாதிக்கப்பட்ட பெண் நேரில் ஆஜராகவும் உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி எம். நிர்மல்குமார் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது பாதிக்கப்பட்ட பெண் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஜான் சத்யன், தவறாக அளிக்கப்பட்ட புகாரில் மனுதாரர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இருவரும் 30 நாட்களாக சிறையில் உள்ளனர். எனவே, ஜாமீன் வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

அப்போது பாதிக்கப்பட்ட பெண் தரப்பில், மனுவுக்கு பதிலளிக்க கால அவகாசம் கோரப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி, பதிலளிக்க அவகாசம் வழங்கி, இந்த வழக்கின் விசாரணையை நாளைக்கு (பிப்.23) ஒத்திவைத்தார்.

# உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர், சட்ட நிபுணர் பாலி எஸ்.நாரிமன் காலமானார்

புதுடெல்லி : பிப். 22-

உச்ச நீதிமன்றத்தின் மிகப் பிரபலமான வழக்கறிஞர்களில் ஒருவரும், அரசியல் சாசன சட்ட நிபுணரும், முன்னாள் கூடுதல் சொலிசிடர் ஜெனரலுமான பாலி எஸ்.நாரிமன் நேற்று அதிகாலை 12.45 மணியளவில் காலமானார். அவருக்கு வயது 95.

1929 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதி பிறந்த அவர் சட்டம் பயின்று சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்தார். இந்நிலையில் வயது மூப்பின் காரணமாக அவர் நேற்று அதிகாலை இயற்கை எய்தினார். அவருக்கு சட்டத்துறை சார்ந்தோரும், தலைவர்களும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டிஒய் சந்திரசூட் நேற்று நீதிமன்ற நடவடிக்கை தொடங்கியதுமே நாரிமன் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார். நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இரவு வரை அவர் அரசியல் சாசன அமர்வு ஒன்றுக்கு நாரிமன் தனது கருத்துகளைப் பதிவு செய்து கொண்டிருந்தார் என்று மூத்த வழக்கறிஞர் ஒருவர் நினைவு கூர்ந்தார்.

கவனம் பெற்ற வழக்குகள்: பாலி எஸ்.நாரிமன் தனது பணிக் காலத்தில் போபால் விஷவாயு வழக்கு, ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கு உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் ஆஜராகி வாதாடியிருக்கிறார்.


எழுத்துப் பணியில் ஆர்வம் கொண்ட நாரிமன் 1999 நவம்பரில் ராஜ்யசபா உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு பத்ம பூஷண், பத்ம விபூஷண் விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. நாரிமனின் மகன் ரோஹின்டன் உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சமூக வலைதளங்களில் இணைந்தார் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்

சென்னை : பிப். 22-

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பெயரில் புதிதாக சமூக வலைதள பக்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பிரேமலதா.விடுத்துள்ள செய்திக்குறிப்பில், "தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், தொலைக்காட்சி, இணையதள ஊடகங்களுக்கும் மற்றும் அனைத்து ஊடக நண்பர்களுக்கும் வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன். இன்று (நேற்று-பிப்.21) முதல் அதிகாரபூர்வமான பேஸ்புக், எக்ஸ் தளம், இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ் அப் போன்ற சமூகவலைதளங்களை தொடங்கி கட்சி ரீதியான அறிவிப்புகளும், மக்களுக்கான செய்திகளும், தனிப்பட்ட கருத்துக்கள் போன்ற முக்கிய செய்திகள் இந்த நான்கு சமூக ஊடகங்கள் வழியாக உங்களை வந்து அடையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.



தேமுதிக நிறுவனத் தலைவர் விஜயகாந்த் உடல்நலக்குறைவால் சமீபத்தில் மறைந்தார். விஜயகாந்த் கடந்த சில ஆண்டுகளாகவே உடல்நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு இருந்ததால் கட்சிப் பணிகளில் தீவிரமாக அவரால் ஈடுபட முடியவில்லை. அவருக்கு பதிலாக அவரின் மனைவி பிரேமலதா விஜயகாந்த் கட்சிப் பணிகளை கவனித்து வந்தார். தொடர்ந்து கடந்த டிசம்பர் மாதம் சென்னை திருவேற்காட்டில் தேமுதிக தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் விஜயகாந்த் முன்னிலையில் தேமுதிக பொதுச் செயலாளராக பிரேமலதா விஜயகாந்த் நியமனம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# உலகத் தமிழர்களை இணைக்கும் ஒற்றை அடையாளம் 'தமிழ்' : முதல்வர் ஸ்டாலின் பெருமித ட்வீட்

சென்னை : பிப். 22-

"அனைத்து வேறுபாடுகளையும் அறுத்தெறிந்து உலகெங்கும் வாழும் தமிழர்களை இணைக்கும் பேராற்றல் கொண்ட ஒற்றை அடையாளம் தமிழ்" என உலகத் தாய்மொழி நாளையொட்டி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில், "அனைத்து வேறுபாடுகளையும் அறுத்தெறிந்து உலகெங்கும் வாழும் தமிழர்களை இணைக்கும்



பேராற்றல் கொண்ட ஒற்றை அடையாளம் தமிழ். 'தாழ்ந்திடு நிலையினில் உனை விடுப்பேனோ? தமிழன் எந்நாளும் தலைகுனி வேனோ?' எனப் பாவேந்தர் பாடியபடி தாய்த்தமிழ் காக்கும் மரபில் வந்தவர்கள் நாம்.

பெயர்சூட்டலில், மேடைச் சொற்பொழிவுகளில், திரைப்பட உரையாடல்களில், அரசு ஆவணங்களில் என எல்லாத் தளங்களிலும் தமிழினைப் பிறமொழி ஆதிக்கத்தினின்று மீட்டு அதன் பழம்பெருமையை நிலைநாட்டிய வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் நாம்.

அத்தகைய இயக்கத்தின் வழிவந்த நமது அரசின் சார்பில், உலகத் தாய்மொழி நாளான இன்று (நேற்று-பிப்.21), தமிழ்நாடு சட்டப்பேரவையில் அன்னைத்தமிழை எந்நாளும் காத்து வளர்த்திட அனைத்து உறுப்பினர்களும் உறுதியேற்றோம்" எனத் தெரிவித்துள்ளார்.

# '5வது கட்ட பேச்சுவார்த்தை' – விவசாயிகளுக்கு மத்திய அமைச்சர் அர்ஜுன் முண்டா அழைப்பு

புதுடெல்லி : பிப். 22, போராட்டம் நடத்தும் விவசாயிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த அரசு தயாராக உள்ளது என்று மத்திய வேளாண் அமைச்சர் அர்ஜுன் முண்டா தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுடன் 5-வது கட்ட பேச்சுவார்த்தை நடத்த அரசு தயாராக இருப்பதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா



நேற்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "நான்காவது சுற்று பேச்சுவார்த்தைக்கு பின்னர், எம்எஸ்பி கோரிக்கை, பயிர் பல்வகைப்படுத்துதல், பயிர் கழிவுகளை எரித்தல், வழக்குகள் போன்ற அனைத்து பிரச்சினைகள் குறித்தும் 5-வது சுற்றில் பேச அரசு தயாராக இருக்கிறது. விவசாயத் தலைவர்களுக்கு மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த நான் அழைப்பு விடுக்கிறேன். அமைதியை பேணுவதற்கு இது மிகவும் முக்கியம்" என்று தெரிவித்துள்ளார்.



காரைக்கால் மாவட்டம் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையைச் சார்ந்த 17 பயனாளிகளுக்கு சுமார் 21 இலட்சம் மதிப்பிலான திருமண உதவித்தொகை, குடிசை மாற்று வாரியம் மூலம் வீடு கட்டுவதற்கான உதவித்தொகை, மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை உள்ளிட்டவைகளை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம் தலைமையில் வழங்கி சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் துணை இயக்குனர் மதன்குமார் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உடன் இருந்தனர்.

# உலக தாய் மொழி தினம் : தமிழை பயன்பாட்டு மொழியாக்க உறுதியேற்போம் – டிடிவி வாழ்த்து

சென்னை : பிப். 22-

நம் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தமிழ் மொழியை பயன்பாட்டு மொழியாக்க நாம் அனைவரும் உறுதியேற்போம் என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து டிடிவி தினகரன் நேற்று தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்: "மொழிகள் பல



இருப்பினும் தாய்மொழி எனும் உளியால் மட்டுமே சிந்தனை எனும் சிற்பத்தை செதுக்கி ஒருவரின் அறிவாற்றலை பெருக்க முடியும் என்பதை உலகிற்கு உணர்த்தும் உலக தாய் மொழிகள் தினத்தில், தாய் மொழியாம் தமிழ் மொழியை காக்க இன்னுயிர் நீத்த மொழிப்போர் தியாகிகளை நினைவில் கொள்வதோடு, நம் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தமிழ் மொழியை பயன்பாட்டு மொழியாக்க நாம் அனைவரும் உறுதியேற்போம்." எனக் கூறியுள்ளார்.

# திருவொற்றியூர் தியாகராஜ சுவாமி வடிவுடை அம்மன் கோவிலில் மாசித் தேரோட்டம்: ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர்




சென்னை, பிப். 22–
சென்னை திருவொற்றியூரில் பூலோகம் கைலாயம் என்று அழைக்கப்படும் 2000 ஆண்டுகள் பழமையான வரலாற்று சிறப்பு வாய்ந்த தியாகராஜ சுவாமி உடனுறை வடிவுடையம்மன் கோவிலில் மாசித் பிரம்மோற்சவத்தை முன்னிட்டு தேரோட்டம் நடைபெற்றது இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர் .

தியாகராஜ சுவாமி கோவிலில் மாசி மாத பிரம்மோற்சவம் கடந்த 15 ஆம் தேதி வியாழக்கிழமை அன்று மாலை கொடியேற்றத்துடன் பிரம்மோற்சவ திருவிழா தொடங்கியது.

பிரம்மோற்சவத்தின் 7 நாள் முக்கிய நிகழ்வான தேர் திருவிழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது. இதில் சந்திரசேகரர் மனோன்மணி தாயார் வண்ண வண்ண மலர் மாலைகள் அணிந்து சிவாச்சாரியார்கள் சிறப்பு பூஜைகள் செய்து சங்க நாதங்கள் மேளதாளங்கள் முழங்க திருநடனம் ஆடி கோவிலை சுற்றி வளம் வந்த பின்னர் திரு தேரில் அமர்ந்தார்.

இதனையடுத்து தியாகராஜா ஆரூரா ஒற்றியூரா நமச்சிவாய என பக்தி கோஷங்கள் முழங்க பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர். சன்னதி தெருவில் இருந்து தொடங்கிய தேரை பெருநகர சென்னை மாநகராட்சி ஒன்றாவது மண்டல குழு தலைவர் தனியரசு வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தார் இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

பள்ளிமாணவமாணவர்கள் கோலாட்டம் பரதநாட்டியம் சிலம்பாட்டத்துடன் தேரின் முன்னே நடனமாடி வரவேற்றனர். நான்கு மாட வீதிகளிலும் சங்கநாதம் கைலாய வாத்தியம் முழங்க சிவாச்சாரியார்கள் புடைசூழ தேரோட்டம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் 45 அடி உயர மெட்ரோ தூண்களுக்கு நடுவே 41 அடி உயரம் உள்ள பிரம்மாண்டமாக தேர் வலம் வந்தது நான்கு மாட வீதிகளிலும் அசைந்து அசைந்து திருத்தேர் சுற்றி வந்து கோயிலை அடைந்தது. தேரோட்ட திருவிழாவில் எந்த ஒரு அசாம் நடைபெறாமல் இருக்க 300க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# பூம்புகார் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி மையங்களில் தாசில்தார் ஆய்வு



செம்பனார்கோயில், பிப்.22–
மயிலாடுதுறை மாவட்டத்திற்கு உட்பட்ட பூம்புகார், சீர்காழி, மயிலாடுதுறை ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு வாக்குச்சாவடி மையங்களை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி உத்தரவிட்டுள்ளார்.

பூம்புகார் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் மொத்தம் 306 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன. இந்த நிலையில் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி தரங்கம்பாடி தாலுகா செம்பனார்கோயில், ஆக்கூர், பண்டாரவடை ஆகிய பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களை வட்டாட்சியர் சரவணன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது அவர், வாக்குச்சாவடி மையங்களில் குடிநீர், கழிப்பிடம், மின்சார வசதி மற்றும் கட்டுமானங்களை பார்வையிட்டார். ஆய்வின்போது தேர்தல் துணை வட்டாட்சியர் பாபு, கிராம நிர்வாக அலுவலர் கணேஷ் குமார், பள்ளி தலைமை ஆசிரியர் சிவக்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

# உ.பி.யில் கூட்டணியை உறுதி செய்த அகிலேஷ் காங்கிரஸுக்கு இறுதியாகும் 17 இடங்கள்



லக்னோ : பிப். 22–
காங்கிரஸ் - சமாஜ்வாதி உறவில்விரிசல்ஏற்பட்டுள்ளதாக சலசலக்கப்படும் நிலையில், “காங்கிரஸுடன் விரிசல் ஏதுமில்லை. கூட்டணிப் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. எல்லாம் நல்லபடியாக நிறைவுபெறும்” என்று சமாஜ்வாதி கட்சித் தலைவரும், உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வருமான அகிலேஷ் யாதவ் தெரிவித்துள்ளார்.

மேலும், மக்களவைத் தேர்தலில் காங்கிரஸுக்கு 17 சீட் வரை தர சமாஜ்வாதி கட்சி முன்வந்துள்ளது. அதற்கான உத்தேசப் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது. ரேபரேலி, கான்பூர், அமேதி, ஃபதேபூர் சிக்ரி, பான்ஸ்கான், சஹரான்பூர், பிரயாக்ராஜ், மகாராஜ்கஞ்ச், பனாரஸ், அம்ரோஹா, ஜான்சி, புலந்த்சாஹர், காசியாபாத், மதுரா, ஹத்ராஸ், பாராபங்கி, டியோரியா ஆகிய தொகுதிகளை காங்கிரஸுக்கு ஒதுக்க சமாஜ்வாதி முன்வந்துள்ளது. இதில் ஹத்ரால் தொகுதியில் இழுபறி நீடிப்பதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில், ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை நீதி யாத்திரையில் அகிலேஷ் யாதவ் பங்கேற்காதது பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி இந்திய ஒற்றுமை நீதி யாத்திரை மேற்கொண்டுள்ளார். தற்போது அவர் உத்தரப் பிரதேசத்தில் இருக்கிறார். அமேதி, ரேபரேலியில் அவர் யாத்திரை மேற்கொண்டபோது அகிலேஷ் யாதவ் அந்த யாத்திரையில் கலந்து கொள்ளவில்லை. இதனால் உ.பி.யில் காங்கிரஸ் -சமாஜ்வாதி கூட்டணி இடையே விரிசல் ஏற்பட்டுள்ளதாக சலசலப்புகள் எழுந்தன. அகிலேஷ் யாதவ் - ராகுல் காந்திக்கு இடையே சுமுக உறவு இல்லை என்றும் பேசப்படுகின்றன.

இந்நிலையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த அகிலேஷ் யாதவ், “நல்ல தொடக்கம். நன்மையாகவே முடியும். எந்தப் பிரச்சினையும் இல்லை. நிச்சயமாக கூட்டணி அமையும். விரைவில் எல்லாம் தெளிவுபடுத்தப்படும்” எனக் கூறினார். முன்னதாக, அவர் காங்கிரஸுடன் தொகுதிப் பங்கீடு முடிந்தபின்னரே ராகுலின் யாத்திரையில் கலந்து கொள்வேன் என்று கூறியிருந்தது நினைவுகூரத்தக்கது.

# இந்தியாவுடனான கூட்டாண்மை முக்கியத்துவம் வாய்ந்தது : டெல்லியில் கிரீஸ் பிரதமர் பிரகடனம்



புதுடெல்லி : பிப். 22–
அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ள கிரீஸ் பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸை குடியரசு தலைவர் மாளிகை முன்பு பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றார்.

கிரீஸ் பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் 2 நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ளார். மிட்சோடாகிஸுடன் அவரது மனைவி மாரேவா கிரபோவ்ஸ்கி மிட்சோடாகிஸும் வந்துள்ளார். புதுடெல்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகை முன்பு அவர்களுக்கு நேற்று வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரதமர் நரேந்திர மோடி, மிட்சோடாகிஸ் தம்பதியை வரவேற்றார்.

அதைத் தொடர்ந்து கிரீஸ் பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் கூறியதாவது: “அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்திருப்பது ஒரு பாக்கியம். கிரீஸைப் பொறுத்தவரை, இந்தியாவுடனான கூட்டாண்மை முக்கியத்துவம் வாய்ந்தது. மேலும் விரிவான ஆலோசனை, அரசியல் ஆலோசனைகள், கூட்டாண்மை ஆகியவற்றைப் பற்றி விவாதிக்க எங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். இரு நாடுகளிடையேயான பொருளாதார வளர்ச்சிக்கு இந்தப் பயணம் உதவும். பிரதமராக நாங்கள் நடத்தும் விவாதங்களை மிகவும் எதிர்பார்க்கிறேன்" என்று கூறினார்.

புதுடெல்லியில் நேற்று தொடங்கிய மூன்று நாள் ’ரைசினா டைலாக் 2024’ நிகழ்ச்சியில் மிட்சோடாகிஸ் சிறப்பு விருந்தினராக பங்கேற்றுப் பேசுகிறார். அவருடன் கிரீஸ் நாட்டு மூத்த அதிகாரிகள், உயர் அதிகாரம் கொண்ட வணிகக் குழுவும் இந்தியா வந்துள்ளது.

இதற்கிடையே, பிரதமர் நரேந்திர மோடியும், கிரீஸ் பிரதமர் மிட்சோடாகிஸும் இருதரப்பு விவாதங்களை நடத்த உள்ளனர். மேலும், பிரதமர் மோடி, விருந்தினரை உபசரிக்கும் வகையில் மிட்சோடாகிஸுக்கு நேற்று மதிய விருந்து அளித்தார்.



▶ காரைக்காலில் அமைந்துள்ள புகழ் பெற்ற மஸ்தான் சாகிப் தர்கா கந்தூரி விழா நடைபெற்றது. இதில் ரதங்கள், பல்லாக்கு மூலம் கொடிகள் வைக்கப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்த ரதம் தர்கா வந்ததடைந்தது. இதனை தொடர்ந்து கொடியேற்றப்பட்டது. இந்த நிகழ்வில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம், மற்றும் நிரவி திருப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன், மாவட்ட ஆட்சியர் முனைவர் து.மணிகண்டன் மற்றும் ஏராளமான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக தர்காவுக்கு வருகை தந்த மாவட்ட ஆட்சியருக்கு தர்கா நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த விழாவின் முக்கிய நிகழ்வான சந்தனக்கூடு விழா வரும் 29-ஆம் தேதி இரவு நடைபெற உள்ளது.



▶ காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு கோட்டுச்சேரி தொகுதிக்குட்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையை சேர்ந்த பயனாளிகளுக்கு ஆதிதிராவிட நலத்துறை மூலம் நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்வில் நெடுங்காடு கோட்டுச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சந்திர பிரியங்கா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 42 பயனாளிகளுக்கு ரூபாய் 31,36,000 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். மேலும் இந்நிகழ்வில் துறை சார்ந்த அதிகாரிகள், பயனாளிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

# “மம்தாவின் மனசாட்சி மரணித்துவிட்டது” சந்தேஷ்காலி விவகாரத்தில் பாஜக தாக்கு



புதுடெல்லி : பிப். 22–
“சந்தேஷ்காலி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி ஏதோ ஒன்றை மறைக்க விரும்புகிறார்” என்று பாஜக குற்றம் சாட்டியுள்ளது.


“தனது அரசியல் நற்பெயரைக் காப்பாற்ற பெண்களின் மரியாதையை மம்தா பணயம் வைக்கிறார்” என்று சாடியுள்ள பாஜக மூத்த தலைவர் ரவிசங்கர் பிரசாத், இந்த விவகாரத்தில் ராகுல் காந்தியின் மவுனம் குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து ரவிசங்கர் பிரசாத் கூறுகையில், "சந்தேஷ்காலி விவகாரம் மிகவும் தீவிரமானது. பெண்கள் மீதான தாக்குதல், அவமானகரமான நடத்தை மற்றும் பாலியல் வன்கொடுமை நமது சமூகத்துக்கும். ஜனநாகத்துக்கு அவமானம். மம்தா பானர்ஜி இன்னும் அதை ஏன் மறைக்கிறார்? ஒரு பத்திரிகையாளரும் கைது செய்யப்பட்டிருக்கிறார். மம்தா எதை மறைக்க விரும்புகிறார். ஏன்? தன்னுடைய அரசியல் நற்பெயரைக் காப்பாற்ற பெண்களின் மரியாதையை பெண் முதல்வர் பணயம் வைக்கிறார். அவரது மனசாட்சி எங்கே மரணித்தது?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

காங்கிரஸ் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளின் மவுனத்தையும் ரவி பிரசாத் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் அவர் கூறுகையில், "போராளிகள் ஏன் இப்போது மவுனமாக இருக்கிறார்கள்? ஒரு மார்க்சிஸ்ட் கட்சி பெண் தலைவர் அந்தப் பகுதிக்குச் சென்றார் என்று நான் கேள்விப்பட்டேன். ஆனால், சிபிஎம் அந்தச் சம்பவத்தை எதிர்த்து வெளிப்படையாக பேசவில்லை. ராகுல் காந்தியும் அமைதியாக இருக்கிறார்" என்று தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தின் வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள சந்தேஷ்காலியில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகி ஷாஜகான் ஷேக் மற்றும் அவரது ஆதரவாளர்கள்நில அபகரிப்பில் ஈடுபட்டதாகவும், பெண்களை பாலியல் வன்கொடுமை செய்து துன்புறுத்தியதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது தொடர்பாக திரிணமூல் கட்சியைச் சேர்ந்த இரண்டுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஷாஜகான் ஷேக் தலைமறைவாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கந்தர்வகோட்டை அருகே துவார் அரசு உயர்நிலைப்பள்ளியில் உலக தாய்மொழி தினம் உறுதிமொழி ஏற்பு



கந்தர்வகோட்டை : பிப். 22–
புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், துவார் அரசு உயர்நிலைப்பள்ளியில் உலக தாய்மொழி தினம் கடைபிடிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தலைமை ஆசிரியர் பொறுப்பு ரவீந்திரன் அனைவரையும் வரவேற்றார். இதில் கலந்து கொண்ட தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வகோட்டை வட்டாரச் செயலாளர் ரகமதுல்லா பேசியதாவது : மொழி என்பது மனிதர்களின் கல்வி மற்றும் மேம்பாட்டுக்கு உதவும் தகவல் தொடர்புக் கருவி மட்டும் தான் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறோம், ஆனால் மொழி என்பது நம் பண்பாட்டு அடையாளம். இந்த உலகத்திற்கும் அதில் வாழும் மக்களுக்கும் மொழி என்பது ஒரு சமூகத்தின் அடையாளம். ஒவ்வொரு இனக் குழுவிற்கும் அடையாளமாக இருப்பது அவர்களின் தாய்மொழிதான். இதனை வலியுறுத்தும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 21ஆம் தேதியை உலக தாய்மொழி தினம் என சிறப்பிக்கிறது.

தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் 20% இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. மாணவர் தமிழில் கையெழுத்து இட வேண்டும் எனவும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் ஆசிரியர்கள் கிறிஸ்டின் நேசகுமாரி, கியானா தன்னார்வலர்கள் சத்யா தேன்மொழி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பரமன்கேணி ஊராட்சியில் பள்ளி ஆண்டு விழா



செய்யூர், பிப். 22–
செங்கல்பட்டு மாவட்டம்,செய்யூர் வட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பரமன்கேணி ஊராட்சியில் லத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆண்டு விழா பள்ளியின் தலைமை ஆசிரியர் சுந்தர் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக ஊராட்சி மன்ற தலைவர் சித்ரா கமலக்கண்ணன் கலந்துகொண்டு விழாவினை தொடங்கிவைத்தார். உடன் துணைத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மேலும் இப்பள்ளி மாணவர்களின் திறனை வெளிப்படுத்தும் நோக்கில் பேச்சுப்போட்டி, நடனப் போட்டி, நாடகம்,மாறுவேடபோட்டி,பாடல் என கரகாட்ட நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. இறுதியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியைகள், பள்ளி மேலாண்மை குழு தலைவர் தேவிகா அருளப்பன் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் என பள்ளி ஆண்டு விழாவில் பலர் கலந்துகொண்டனர்.

# தண்டையார்பேட்டையில் காங்கிரஸ் கட்சியின் பிப்ரவரி மாத மாதாந்திர கூட்டம் மற்றும் பூத் கமிட்டி சரிபார்ப்பு நிகழ்ச்சி



சென்னை , பிப். 22–
சென்னை தண்டையார்பேட்டை உள்ள தனியார் மண்டபத்தில் காங்கிரஸ் கட்சியின் பிப்ரவரி மாத மாதாந்திர கூட்டம் மற்றும் பூத் கமிட்டி சரிபார்ப்பு நிகழ்ச்சி பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற காங்கிரஸ் தலைவரும், மாவட்ட தலைவருமான எம். எஸ்.திரவியம் தலைமையில் நடைபெற்றது.

வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் சர்க்கிள் தலைவர்கள் ஆர்.கே.நகர் சையத் பிசிசி, எஸ் . கே .வீராரெட்டி, வால்டாக்ஸ் ரோடு ஜே.ரமேஷ், ஏஜே காலனி பி .சிவா, சக்தி டி.நாகேந்திரன், எம் .நஜ்மா ஷெரிப், கே.எஸ். அரவிந்த் ஆறுமுகம், எம். பி .லோகநாதன், ஜி.ஹரிஸ்வர், எண்ணூர் பி.குணசீலன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக மாநிலத் துணைத் தலைவரும், பாராளுமன்றத் தேர்தல் 2024 வடசென்னை பொறுப்பாளருமான எஸ். எம் .இதயத்துல்லா கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட தலைவர்கள் *இ.எர்னட்ஸ்பால், டி வி.துரைராஜ், மாவட்ட பொருளாளர் ஆர்.சுரேஷ்குமார் எம். சி,மாவட்டத்திற்கு உட்பட்ட முக்கியஸ்தர்கள், பிசி சி உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பிரிவு மாவட்ட தலைவர்கள், வட்டத் தலைவர்கள், பிரிவு மாநில, மாவட்ட நிர்வாகிகள், டிசிசி உறுப்பினர்கள், சர்க்கிள், வட்ட நிர்வாகிகள் மற்றும் காங்கிரஸ் தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கன்னிகைப்பேர் கிராமத்தில் மோட்டார் சைக்கிள் மீது அரசு பஸ் மோதி பெண் பலி

ஊத்துக்கோட்டை, பிப்22–
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், மதுரைவாசல் கிராமம், பள்ளகாலனி,பெருமாள் கோவில் தெருவில் வசித்து வந்தவர் ரதிதேவி (வயது35) ஆவார்.இவரது கணவர் ஜீவா(வயது43) எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறார். இத்தம்பதியினருக்கு, கன்னிகைப்பேர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 10–ம் வகுப்பு படிக்கும் லாவன்யா,9–ம் வகுப்பு படிக்கும் அனுப்ரியா என இரண்டு மகள்கள் உள்ளனர்.

இந்நிலையில்,நேற்று ரதிதேவியின் உறவினர் வீட்டு சீமந்த நிகழ்ச்சி கன்னிகைப்பேர் பஜார் வீதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு,ரதிதேவி சென்று இருந்தார். பின்னர், மாலை இக்கிராமத்தைச் சேர்ந்த கோபி(வயது45) என்பவரது மோட்டார் சைக்கிளில் வீட்டிற்கு புறப்பட்டு வந்தார். கன்னிகைப்பேர்-பெரியபாளையம் நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்த போது சென்னை கோயம்பேட்டில் இருந்து பெரியபாளையம் வழியாக மாதர்ப்பாக்கம் நோக்கிச் சென்ற அரசு போக்குவரத்து கழக பஸ் ஒன்று கண் இமைக்கும் நேரத்தில் மோட்டார் சைக்கிள் மீது மோதியது.இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பின்புறம் அமர்ந்து சென்ற ரதிதேவி தூக்கி வீசப்பட்டார். படுகாயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே பலியானார். கோபி படுகாயம் அடைந்தார்.



அருகில் இருந்தவர்கள் உடனடியாக பெரியபாளையம் காவல் நிலையத்துக்கு தகவல் அளித்தனர்.சம்பவ இடத்துக்கு போலீசார் விரைந்து வந்தனர். படுகாயம் அடைந்த கோபியை மீட்டு பெரியபாளையம் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். பலியான ரதிதேவியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், விபத்துக்கு காரணமான பஸ்ஸை பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். பஸ்ஸை ஓட்டி வந்த டிரைவர் சக்திவேல்(வயது53) என்பவரை கைது செய்தனர். மேலும்,வழக்கு பதிவு செய்து இந்த விபத்து குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.சீமந்த நிகழ்ச்சிக்கு சென்ற பெண் ஒருவர் பஸ் மோதி பலியான சம்பவம் இப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# “தமிழ்க் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்கும் ஆட்சி’ – அமைச்சர் சேகர்பாபு பெருமிதம்



*சென்னை, பிப். 22–*
*"தமிழ்க் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்கின்ற ஆட்சி, தமிழக முதல்வரின் ஆட்சியாகும்" என்றுசட்டப்பேரவையில், கேள்வி நேரத்தின்போது பேசிய இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.*

*தமிழக சட்டப்பேரவையில் நேற்று நடந்த கேள்வி நேரத்தின்போது,மேட்டூர், பாபநாசம், திருவள்ளூர், கோவை தெற்கு தொகுதி எம்எல்ஏக்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு பதிலளித்தார். அப்போது பாபநாசம் தொகுதி எம்எல்ஏ ஜவாஹிருல்லா, “திருவலஞ்சுழி வெள்ள விநாயகர் கோயிலுக்கு புதிய தேர் வடிவமைப்பதற்கும், சிதலமடைந்து இருக்கின்ற தேர் மண்டபத்தை சீரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா?” என்று கேள்வி எழுப்பினார்.*

*இதற்கு பதிலளித்து பேசிய அமைச்சர் சேகர்பாபு, “தமிழக முதல்வரின் ஆட்சியில் முருகப்பெருமானின் அறுபடை வீட்டுக்கு அவர் சேர்த்திருக்கின்ற பெருமையை கூற விரும்புகிறேன்.திருச்செந்தூர் திருக்கோயிலில் 300 கோடி ரூபாய் அளவுக்கு திருப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. மறைந்த முதல்வர் கருணாநிதியின் ஆட்சி காலத்தில் 2010-ம் ஆண்டு பழனியில் ரூ.58 கோடி மதிப்பிலான 58 ஏக்கர் நிலப்பரப்பு பக்தர்களின் நலன்கருதி எதிர்கால சேவைக்கு கையகப்படுத்துவதற்கு பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு செயல்வடிவம் தந்த ஆட்சி திமுக ஆட்சி.*

*திருப்பரங்குன்றம் மற்றும் திருநீர்மலை திருக்கோயில்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலேயே சுமார் 26 கோடி ரூபாய் செலவில் ரோப் கார் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பை தந்ததும் இந்த ஆட்சிதான். அறுபடை வீடுகளுக்கு ஒரே நேரத்தில் சென்று சாமி தரிசனம் செய்ய விரும்பிய வயது முதிர்ந்த பக்தர்களின் ஏக்கத்தை அறிந்து முதல்வர், இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் ஒருபுரட்சியாக அறுபடை வீடுகளுக்கு ஆண்டுக்கு 60 வயது முதல் 70 வயதுக்குட்பட்ட 1,000 பக்தர்களை அழைத்துச் செல்ல வேண்டும் என்ற உத்தரவிட்டு அதற்குண்டான நிதி ரூ.1.58 கோடியை அரசின் சார்பில் வழங்கினார்.*

*அதன்படி முதற்கட்டமாக 207 பக்தர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இரண்டாம் கட்டமாக மார்ச் 7-ம் தேதி 200 பக்தர்கள் அழைத்துச் செல்லப்பட உள்ளனர். தமிழ்க்கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்கின்ற ஆட்சி தமிழக முதல்வரின் ஆட்சியாகும். எம்எல்ஏ ஜவாஹிருல்லா கோரிய வெள்ளைவிநாயகர் திருக்கோயில் திருப்பணிக்கு ரூ.4.55 கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அத்திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர் உருவாக்குவதற்கும், தேர் மண்டபத்தினை சீரமைப்பதற்கும் சாத்திய கூறுகள் ஆராயப்பட்டும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்” என்று அமைச்சர் சேகர்பாபு கூறினார்.*



புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, கொப்பம்பட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ட்ரான்ஸ்போர்ட் நிறுவனர் மா.அறிவழகன் நரங்கியர் இல்ல புதுமனை புகுவிழா நேற்று நடைபெற்றது. விழாவில் புதுக்கோட்டை திமுக வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே. செல்லபாண்டியன், அதிமுக முன்னாள் அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், அரசு அதிகாரிகள், தொழிலதிபர்கள், அரசு ஒப்பந்ததாரர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நிகழ்வில் வடமலைநாட்டு அம்பலக்காரர், அரசு ஒப்பந்தக்காரர் தெம்மாவூர் டிகேடி.கே.வல்லரசு நரங்கியர் அனைவரையும் வரவேற்று சிறப்பித்தார்.

# அறமனச்செம்மல் சீனு.சின்னப்பா நினைவாக மணவிடுதி உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கேடயம் பரிசளிப்பு

புதுக்கோட்டை : பிப். 22-

பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ஆண்டு விழா நடத்திட தமிழக அரசு சமீபத்தில் ஆணையிட்டது. அந்த முறையில் புதுக்கோட்டை மாவட்டம், மணவிடுதி அரசு உயர்நிலைப்பள்ளியில் முதலாவது ஆண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.



நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் பட்டதாரி ஆசிரியர் செந்தில்குமார் வரவேற்று பேசினார். பின்னர் பட்டதாரி ஆசிரியர் உதயகுமார் ஆண்டறிக்கை வாசித்தார். பள்ளியின் தலைமையாசிரியர் அருணாசலம் தலைமை தாங்கினார். பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் வடிவேல் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் சக்திவேல், பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் லெட்சுமி, தில்லையப்பன், ஆவான், இராஜலெட்சுமி, கிருஷ்ணன், சுப்பிரமணியன், சதீஷ் மற்றும் பேராசிரியர் சி.ஹரிராம் ஜோதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். பச்சைபூமி அமைப்பின் புரவலர் பி.ஆண்டனி சிறப்புரையாற்றினார்.

2023-24 ஆம் கல்வியாண்டில் பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற 107 மாணவர்களுக்கு அறமனச்செம்மல் சீனு. சின்னப்பா அவர்களின் நினைவாக ரூ.17,000 மதிப்பிலான கேடயம் நினைவுப்பரிசாக வழங்கப்பட்டது. புதுக்கோட்டை ஸ்ரீ சரவணபவன் உரிமையாளர் ஆதித்தன் சார்பில் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. தவசியப்பன் நினைவாக அனைவருக்கும் பிஸ்கட் வழங்கப்பட்டது. மாணவர்களின் 14 கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றம் செய்யப்பட்டது. பட்டதாரி ஆசிரியர் காயத்ரி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். அனைவருக்கும் ஆசிரியர்கள் சார்பாக மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிறைவாக பட்டதாரி ஆசிரியர் ரமேஷ் நன்றி கூறினார்.

# ஆலங்குடி அருகே சாலை விபத்தில் சிறுமி உள்பட இருவர் உயிரிழப்பு

ஆலங்குடி : பிப். 22-

ஆலங்குடி அருகே வாகனம்மோதிமோட்டார் சைக்கிளில் சென்ற 5 வயது சிறுமி, இளைஞர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள சேவுகம்பட்டியைச் சேர்ந்தவர் எம்.மாரிமுத்து (25) கட்டுமானத் தொழிலாளியான இவர், உறவினரான அதே பகுதியைச் சேர்ந்த முருகேசன் மகள் பிரதிக்ஷாவை (5)மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டுநேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு செம்பட்டிவிடுதி 4 சாலை கடைவீதிக்கு சென்றுவிட்டு மீண்டும்ஊர்திரும்பியபோது எஸ்.மேலப்பட்டி அருகே அவ்வழியாகச் சென்ற வாகனம் இவரது மோட்டார் சைக்கிள் மீது மோதிவிட்டு நிற்காமல் சென்றுவிட்டது. இதில், அந்தஇடத்திலேமாரிமுத்து உயிரிழந்தார். பலத்த காயமடைந்த சிறுமியை அருகில் இருந்தவர்கள் மீட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்குஅனுப்பி வைத்தனர். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் சிறுமி ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளனர். இதுகுறித்துசெம்பட்டிவிடுதி போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அசோக் நகர் பள்ளியில் என் குப்பை என் பொறுப்பு மாபெரும் தூய்மைப் பணி முகாம்



புதுக்கோட்டை, பிப். 22-

புதுக்கோட்டை அசோக் நகர் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் புதுக்கோட்டை நகராட்சி மூலம் மாபெரும் தூய்மைப்பணி முகாம் நடைபெற்றது. முகாமை புதுக்கோட்டை நகராட்சி தூய்மை நகரத்திற்கான மக்கள் இயக்கம் நடத்தியது.

பள்ளி, வீடு சுற்றுப்புறம் போன்ற இடங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ள மாணவர்களுக்கு நெறிமுறைகள் கூறப்பட்டது. என் குப்பை என் பொறுப்பு என்ற தலைப்பில் நகராட்சி அலுவலர்கள் மாணவர்களிடம் வினாக்கள் கேட்டு தூய்மை பற்றி விளக்கினார்கள். பள்ளித் தலைமை ஆசிரியர் நிர்மலா தலைமையேற்று தூய்மை முகாம் குறித்து விளக்கினார்.

ஆசிரியர் பழனிச்சாமி வரவேற்புரையாற்றினார். புதுக்கோட்டை நகராட்சியில் இருந்து 20க்கும் மேற்பட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். மாணவர்கள் ஆசிரியர்கள் அலுவலர்கள் தூய்மைப் பணி குறித்த உறுதிமொழியை எடுத்ததுக்கொண்டனர். ஆசிரியர் ஜீனத்துனிசாபேகம் நன்றி கூறினார். ஆசிரியர்கள் சமீம்பானு அனுபமா கஸ்தூரி மற்றும் கலைச்செல்வி ஆகியோர் முகாமை ஒருங்கிணைத்தார்கள்.

# அறந்தாங்கி அருகே குடிநீர் இன்றி பரிதவிக்கும் பள்ளி, அங்கன்வாடி மாணவர்கள்

புதுக்கோட்டை : பிப். 22-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே குடிநீர் விநியோகம் இல்லாததால், பள்ளி மற்றும் அங்கன்வாடி மாணவர்கள் பரிதவித்து வருகின்றனர்.





அறந்தாங்கி அருகேயுள்ள திருநாளூர் வடக்கு அரசு நடுநிலைப் பள்ளியில் மாணவ - மாணவிகள் 150 பேர் படித்து வருகின்றனர். மேலும், இவ்வளாகத்தில் உள்ள அங்கன்வாடியில் சிறுவர்கள் 40 பேர் படித்து வருகின்றனர்.

கடந்த 5 நாட்களாக இவ்வளாகத்துக்கு குடிநீர் வரவில்லை. இதனால், மாணவ - மாணவிகளுக்கு சத்துணவு சமைப்பது சிரமமாக உள்ளது. கழிப்பிடத்தையும் பயன்படுத்த முடியவில்லை. எனவே, பள்ளிக்கு தடையின்றி குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அப்பகுதியைச் சேர்ந்த மாதர் சங்கத்தினர் கூறியது: திருநாளூர் வடக்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி அருகில் உள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து பள்ளிக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. இந்த நீர்தான், பள்ளி மற்றும் அங்கன்வாடியில் சமையல் செய்யவும், குடிநீராகவும், கழிப்பிடத்திலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையில்,கடந்த5நாட்களாக நீர் வராதாதல் சத்துணவு சமைப்பது பெரும் சிரமமாக உள்ளதுடன், மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றனர்.

இது குறித்து ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் கூறுகையில், “மும்முனை மின்சாரம் ஒரு வாரம் காலையிலும், அடுத்த வாரம் மாலையிலும் என சுழற்சி முறையில் பகலில் 6 மணி நேரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தற்போது மாலையில் குடிநீர் விநியோகிக்கப்படும் நிலையில், அந்த நேரத்தில் கேட்வால்வை திறந்து பள்ளி குடிநீர்த் தொட்டிகளில் நீர் நிரப்பிக் கொள்ள வேண்டும். ஆனால், இதை அங்கு யாரும் செய்வதில்லை. பள்ளிக்கென தனியாக ஆழ்துளை கிணறு அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலனையில் உள்ளது” என்றனர்.

# சிந்தாமணியில் இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா

தென்காசி : பிப். 22,

தென்காசி மாவட்டம், புளியங்குடி,சிந்தாமணியில் இல்லத்துப் பிள்ளைமார் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோவிலில் புனாராவர்த்தன அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக விழாவும், புதிதாக மூலவர் கோபுரமும், முன்பு சாலை கோபுரமும் திருக்கோவில் முழுவதும்சீர்செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் நிறைவு செய்யப்பட்டு மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.



இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோவில் வளாகத்தில் பரிகார தெய்வங்களாக கன்னி விநாயகர், நந்தி, பலிபீடம், பைரவர், தெய்வங்களுக்கு புனாராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகமும், யாகசாலை பூஜை, கேள்விகளிலும்,குடமுழுக்கு பெருவிழாவும் சிறப்பாக நடைபெற்றது. தலைவர் வி. திருமலைச்சாமி பிள்ளை, செயலாளர் ஆர். ராஜேந்திரன், பொருளாளர் எஸ். ராமகிருஷ்ணன், விழா கமிட்டி உறுப்பினர்கள் முருகேசன், மாடசாமி, சுடலைமணி, முருகன், ஆவுடையப்பன்,மாடசாமி, விஜய் மாரியப்பன், ராம்குமார், கணேசன், சிவா,இசக்கி,எஸ். முருகன், மணிகண்டன்,முத்துச்சாமி, மாரிமுத்து, கருப்பசாமி மதுரை, முத்துக்குமார் சிவகிரி ஆகியோர் மகா கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டு அனைத்து பொதுமக்களையும் வரவேற்றனர். மதிய அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது.

# சாலை விபத்துகளை தடுக்க ஜேசிஐ புதுக்கோட்டை சென்ட்ரல் புதிய முயற்சி



புதுக்கோட்டை , பிப். 22-

ஜேசிஐ புதுக்கோட்டை சென்ட்ரல் கிளை சார்பில் 3டி கண்ணாடி புதுக்கோட்டை - திருச்சி சாலையில் ஸ்ரீ பிரகதாம்பாள்கோவில் அருகில் உள்ள வளைவில் பொருத்தப்பட்டது.

சாலைவிபத்துகளை தடுப்பதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் இத்திட்டத்தை ஜேசிஐ புதுக்கோட்டை சென்ட்ரல் சார்பில் புதுக்கோட்டை நகர பகுதியில் முதல் முறையாக வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கவிஞர் தங்கம்மூர்த்தி, மோகன்ராஜ், காங்கிரஸ் கட்சி சிவக்குமார். ஜேசிஐ புதுக்கோட்டை சென்ட்ரல் தலைவர் பாரதி ரஞ்சித் உடனடி முன்னாள் தலைவர் கஜேந்திரன், முன்னாள் தலைவர் பிரசாத் மற்றும் மண்டல துணை தலைவர் அசோக்ராஜ், முன்னாள் தலைவர்கள் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

# அரியலூர் அருகே வள்ளலார் கல்வி நிலையத்தில் உலக தாய்மொழி தின விழா

அரியலூர், பிப். 22-

அரியலூர் அருகே வள்ளலார் கல்வி நிலையத்தில் உலக தாய்மொழி தின விழா நடைபெற்றது.



இது பற்றி பள்ளியின் தலைமை ஆசிரியர் சௌந்தர்ராஜன் வெளியிட்ட செய்தி குறிப்பு:இலிங்கத்தடிமேடு, வள்ளலார் கல்வி நிலையம், அரசு உதவி பெறும் கே.ஆர்.வி. நடுநிலைப் பள்ளியில், உலகத் தாய்மொழி தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. உலக திருக்குறள் கூட்டமைப்பின் தலைவர் மு.ஞானமூர்த்தி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாணவர்களுக்கு பரிசளித்து பேசுகையில், கருவறை சுவர் தாண்டி காதில் கசிந்த ஒற்றை மொழி தாய்மொழி, நமது தாய்மொழி என்றும் விட்டுக்கொடுக்காமல் நம் தலைமுறைக்கு சொல்லி வளர்ப்போம். நம் தாய் மொழியான தமிழ் மொழியை பாதுகாக்க உறுதியேற்போம் என சிறப்புரை ஆற்றினார்.

உலகத் திருக்குறள் கூட்டமைப்பு மாநில பொருளாளர் பெ.சௌந்தரராஜன் வரவேற்புரை நல்கினார். வள்ளலார் கல்வி நிலைய செயலாளர் கொ.வி. புகழேந்தி தலைமை உரையாற்றினார். உலக திருக்குறள் கூட்டமைப்பு மாவட்ட பொருளாளர் தியாகராஜன், தமிழ் களம் இளவரசன், ரா.பொ.ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். உயர்கல்வி ஆலோசகர் மற்றும் நூலாசிரியர் பழனியப்பன் சிறப்புரை ஆற்றினார். முனைவர் எஸ்.வி சாந்தி, முனைவர் க.சின்னதுரை, பொறியாளர் பெ. நாகமுத்து, கு. மங்கையர்க்கரசி, செ.அண்ணாமலை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மா.பழனிசாமி, சீனி அறிவு மழை ஆகியோர் பாடல்கள் பாடினர். உலக திருக்குறள் கூட்டமைப்பு மாவட்ட தலைவர் பெ. வாசுதேவன் நன்றியுரை கூறினார்.

# “தலைப்பாகை அணிந்துள்ள காவலரை காலிஸ்தான் தீவிரவாதி என கூறுவதா” : பாஜக-வை சாடும் மம்தா பானர்ஜி

கொல்கத்தா : பிப். 22-

தலைப்பாகை அணிந்துள்ள ஒவ்வொருவரையும் காலிஸ்தான் பிரிவினைவாதிகள் என பாஜக கருதுவதாக மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி குற்றச்சாட்டினார்.



மேற்குவங்க மாநிலத்தில் சதீஸ் காளி என்ற இடத்தில் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாக கூறி பாரதிய ஜனதா கட்சியினர் பல்வேறு இடங்களில் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்நிலையில், பாதுகாப்பு பணியில் டர்பன் அணிந்திருந்த சீக்கிய காவலரை பாஜக எம்.எல்.ஏ. காலிஸ்தான் தீவிரவாதி என கூறிய விடியோவை எக்ஸ் தளத்தில் பதிவிட்டு மம்தா கண்டனம் தெரிவித்து இருக்கிறார்.

இது தொடர்பாக வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ள அவர்; பாஜகவின் பிரித்தாளும் அரசியல் வெட்கமின்றி எல்லை மீறி உள்ளதாக தெரிவித்திருக்கிறார். நமது தேசத்திற்கான தியாகங்கள் அசைக்க முடியாத உறுதிப்பாட்டுகாககூட்டப்படும். நமது சீக்கிய சகோதர, சகோதரிகளின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தும் முயற்சியை வன்மையாக கண்டிப்பதாகவும் மம்தா கூறினார். மேற்கு வங்கத்தில் சமூக நல்லிணக்கத்தை பாதுகாக்க உறுதியான நடவடிக்கை எடுப்பேன். அதைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் மம்தா பானர்ஜி பதிவிட்டுள்ளார்.

# ‘ராஷ்டிரிய ஷோஹசித் சமாஜ்’ – உ.பி.யில் புதிய கட்சி தொடங்கினார் சுவாமி பிரசாத் மவுரியா

உத்தரபிரதேசம் : பிப். 22-

உத்தரபிரதேசத்தில் சமாஜ்வாதி கட்சியின் அடிப்படை உறுப்பினர், மற்றும் எம்எல்சி பதவியிலிருந்து விலகிய சுவாமி பிரசாத் மவுரியா புதிய அரசியல் கட்சி தொடங்கியுள்ளார்.

அகிலேஷ் யாதவ் தலைமையிலான சமாஜ்வாதி கட்சியில் தேசிய பொதுச் செயலாளராக இருந்த சுவாமி பிரசாத் மவுரியா கடந்த பிப்ரவரி 13-ல் அந்தப் பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து அவர் மீண்டும் பாஜகவில் சேருவார் என எதிர்பார்க்கப்பட்டது. பிறகு காங்கிரஸுக்கு ஆதரவளிக்கும் வகையில் உ.பி.யில் ராகுல் காந்தி யாத்திரையில் அவர் கலந்துகொள்வார் எனத் தகவல் வெளியானது.

இச்சூழலில் மவுரியா நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை சமாஜ்வாதி அடிப்படை உறுப்பினர், எம்எல்சி பதவியிலிருந்து விலகினார். இதனை மவுரியா எக்ஸ் சமூகவலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார். அப்பதிவில், ராஷ்டிரிய ஷோஹசித் சமாஜ் (தேசிய ஒதுக்கப்பட்ட சமூகம்) எனும் பெயரில் புதிய அரசியல் கட்சி தொடங்கியிருப்பதாகவும் இதன் முதல் கூட்டம் இன்று டெல்லி டால்கட்டோரா அரங்கில் நடைபெறும் என்றும் அவர் கூறியுள்ளார். இவரது கட்சியின் கொடியில் நீலம், சிவப்பு மற்றும் பச்சை நிறங்கள் இடம் பெற்றுள்ளன.

தனது ராஜினாமா குறித்து மவுரியா கூறும்போது,



“சமாஜ்வாதிக்கு 2016-ல் இருந்த 44 எம்எல்ஏக்கள் எண்ணிக்கையை 2022-ல்111 ஆக நான் உயர்த்தினேன். சமாஜ்வாதி வாக்குகளும் 6 சதவீதம் உயர்ந்தது. ஆனால் அகிலேஷ் என்னை அவமதித்து விட்டார். 2017 முதல் சமாஜ்வாதி கட்சி தேசிய அரசியலிலும் ஒன்றுமில்லாமல் போய் விட்டது” என்றார்.

இதனிடையே, மவுரியாவை சமாதானப்படுத்தி சமாஜ்வாதியில் அவரை நீடிக்கச் செய்வதற்கான முயற்சியும் நடைபெற்றது. இதற்காக லக்னோவில் மவுரியாவின் வீட்டுக்குச் சென்ற சமாஜ்வாதி மூத்த தலைவர் ராம் கோவிந்த் சவுத்ரியிடம், மவுரியா மவுனமாக இருந்து விட்டார். மவுரியா தனது சொந்த நலனுக்காக கட்சியிலிருந்து விலகியிருப்பதாக சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் புகார் கூறியுள்ளார்.

உ.பி.யின் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் முக்கியத் தலைவராக கருதப்படும் சுவாமி பிரசாத் மவுரியா, மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியில் முக்கியத் தலைவராக இருந்துள்ளார். இக்கட்சி சார்பில் 5 முறை எம்எல்ஏவாக இருந்த இவர், 2016-ல் பாஜகவில் சேர்ந்தார். மவுரியாவுக்கு முதல்வர் யோகி ஆதித்யநாத்தின் அமைச்சரவையில் இடம் கிடைத்தது.

2022-ல் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு பாஜகவிலிருந்து விலகிய அவர், சமாஜ்வாதியில் இணைந்தார். மவுரியாவின் மகளான சங்கமித்ராமவுரியா, பாஜக எம்.பி.யாக உள்ளார். மகன் உத்கிரிஷ்த் மவுரியா இரண்டு முறை சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட்டும் வெற்றிபெற முடியவில்லை. மவுரியா புதிய கட்சி தொடங்கியிருப்பது, சமாஜ்வாதி கட்சியின் பிற்படுத்தப்பட்ட சமூக வாக்குகளை பிரிக்கும் வாய்ப்புள்ளது.

### சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில்

# ஒன்றிய, கிராம பகுதிகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் – சட்டமன்றத்தில் ராஜா எம்எல்ஏ கோரிக்கை

சங்கரன்கோவில் : பிப். 22-

தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத் தொடரில் பேசிய சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, கடந்தாண்டு கூட்டத்தொடரில் சங்கரன்கோவில் நகர் பகுதிக்கு கூடுதலாக குடிநீர் வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு அரசின் மூலம் தற்பொழுது சங்கரன்கோவில் நகர் பகுதியில் கூடுதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



இதற்கு அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும், தற்பொழுது சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேலநீலிநல்லூர், சங்கரன்கோவில், குருவிகுளம் மற்றும் மானூர் ஒன்றியபகுதிகளை உள்ளடக்கிகிராமங்களுக்கு புதிய கூட்டு குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையைமுன்வைத்து பேசினார். அதற்கு பதில் அளித்த அமைச்சர் கே.என்.நேரு தற்போது சங்கரன்கோவில் நகர் பகுதிகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருவதாகவும், சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி ஒன்றிய பகுதிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் ராஜா வைத்துள்ள கோரிக்கையை தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கைஎடுக்கப்படும் என தெரிவித்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# 4-வது டெஸ்ட் - பும்ரா இன்றி களமிறங்கும் இந்தியா



**மும்பை : பிப். 22,**


**இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதுவரை மூன்று போட்டிகள் நடைபெற்றுள்ள நிலையில், இந்திய அணி இரண்டுபோட்டிகளில் வெற்றி பெற்று முன்னிலையில் இருக்கிறது.**

இதனிடையே இரு அணிகள் மோதும் நான்காவது டெஸ்ட் போட்டி நாளை துவங்குகிறது. அந்த வகையில், இங்கிலாந்து அணிக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா விளையாட மாட்டார் என்று இந்தியகிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

இதே போன்று கே.எல். ராகுல் நான்காவது டெஸ்ட் போட்டியில் விளையாட மாட்டார் என்று பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது. ஐந்தாவது டெஸ்ட் போட்டியில் பும்ரா விளையாடுவாரா என்பது அவரின் உடல்நிலையை பொருத்தே முடிவு செய்யப்படும் என பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது.

மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இருந்து விடுவிக்கப்பட்ட முகேஷ் குமார் நான்காவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு எதிராக களமிறங்கவுள்ளார். முன்னதாக முகமது சிராஜ் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது விடுவிக்கப்பட்டு, மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடினார்.

# கைப்பந்து லீக் போட்டி சென்னை அணி 2-வது வெற்றி



**சென்னை : பிப். 22,**

**9-வது லீக் ஆட்டத்தில் சென்னை பிளிட்ஸ், கொச்சி புளூ ஸ்பைக்கர்சை வீழ்த்தியது.**

9 அணிகள் இடையிலான 3-வது பிரைம் வாலிபால் (கைப்பந்து) லீக் போட்டி சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை நடந்த 9-வது லீக் ஆட்டத்தில் சென்னை பிளிட்ஸ் 15-10, 15-12, 16-14 என்ற நேர்செட்டில் கொச்சி புளூ ஸ்பைக்கர்சை வீழ்த்தியது. 3-வது ஆட்டத்தில் ஆடிய சென்னை அணி 2-வது வெற்றியை தனதாக்கியது. சென்னை அணியின் கேப்டன் அகின் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

# புரோ ஆக்கி லீக் தொடரில் பெனால்டி ஷூட் அவுட்டில் ஸ்பெயினை வீழ்த்தி இந்தியா வெற்றி



**புவனேஸ்வர் : பிப். 22,**

**இந்தியா - ஸ்பெயின் இடையிலான ஆட்டம் வழக்கமான நேர முடிவில் 2-2 என்ற கோல் கணக்கில் சமன் ஆனது.**

9 அணிகள் இடையிலான 5-வது புரோ ஆக்கி லீக் தொடரின் 2-வது கட்ட போட்டி ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் நடைபெற்று வருகிறது. இதில் இந்திய அணி விளையாடிய முதல் 4 போட்டிகளில் 3 வெற்றிகளும், ஒருதோல்வியும்கண்டிருந்தது.

இந்நிலையில் இந்திய அணி தனது 5-வது லீக் ஆட்டத்தில் ஸ்பெயினுடன் மோதியது. வழக்கமான நேர முடிவில் இந்த போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் சமன் ஆனதைத் தொடர்ந்து, ஆட்டம் பெனால்டி ஷூட்-அவுட்டுக்கு நகர்ந்தது.

இதில் 7-7 என்று வரை சமநிலை நீடித்தது. 8-வது வாய்ப்பை இந்திய வீரர் லலித்குமார் உபத்யாய் கோலாக்க, எதிரணியின் வாய்ப்பை இந்திய கோல் கீப்பர் ஸ்ரீஜேஷ் தடுத்து நிறுத்தி அசத்தினார். முடிவில் இந்தியா 8-7 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

வரலாறு சினிமா

# விஜயகாந்த் நினைவிடத்தில் 1,000 பேருக்கு அன்னதானம் வழங்கிய நடிகர் மோகன்



**சென்னை : பிப். 22,**

**சென்னையில் உள்ள விஜயகாந்த் நினைவிடத்தில் நடிகர் மோகன் நேற்று அஞ்சலி செலுத்தினார். மேலும், அவரது ரசிகர் மன்றம் சார்பில் 1,000 பேருக்கு அன்னதானம் வழங்கினார்.**

நடிகர், தேமுதிக தலைவர் விஜயகாந்த் கடந்த வருடம் டிசம்பர் மாத இறுதியில் காலமானார். இவரது மறைவுக்கு நேரிலும், இணையதளம் வாயிலாகவும் திரை பிரபலங்களும், அரசியல் பிரமுகர்களும் தங்களது இரங்கலைத் தெரிவித்தனர். தேமுதிக அலுவலகத்தில் விஜயகாந்த் நினைவிடத்தில் ஏராளமான தொண்டர்களும், பிரபலங்களும் நேரில் வந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அந்த வகையில், நடிகர் மோகன், விஜயகாந்த் நினைவிடத்திற்கு நேற்று நேரில் அஞ்சலி செலுத்தினார். மேலும், அவரது ரசிகர் மன்றம் சார்பில் 1,000 பேருக்கு அன்னதானம் வழங்கினார்.

அதன் பிறகு நடிகர் மோகன் செய்தியாளர்களிடம், "நடிகர்களுக்கும், மக்களுக்கும் அவர் கேப்டனாக இருந்து வாழ்ந்தவர். அவருடைய நண்பர் என்பதே எனக்குப் பெருமை. அவருடைய முரட்டு தைரியமும், நேர்மையும் எனக்குப் பிடிக்கும். அவருடைய நினைவிடத்தில் இப்போது அன்னதானம் கொடுத்து வருகிறார்கள் என்பது நெகிழ்ச்சியான விஷயம். என்னுடைய ரசிகர் மன்றம் சார்பாக ஆயிரம் பேருக்கு அன்னதானம் கொடுத்தோம் என்பதில் பெருமைப்படுகிறேன். தினமும் இந்த அன்னதானம் நடப்பது என்பதைக் கேட்டபோது அவர் மீதான மரியாதை இன்னும் அதிகமாகி விட்டது" என்று கூறினார்.



நாகசைதன்யாவின் பெயரைக் குறிப்பிடாமல் பேசியுள்ள சமந்தா,"தசை அழற்சி பிரச்சினை ஏற்படுவதற்கு முந்தைய ஆண்டு நினைவிருக்கிறது. அது எனக்கு கடினமான ஆண்டு. நானும் என் நண்பர் ஹிமாங்கும் மும்பையிலிருந்து திரும்பி வந்தோம். 'நீண்ட நாள்களாகவே நிம்மதியாகவும் அமைதியாகவும் நான் இல்லை. இப்போது நிம்மதியாக இருக்கிறேன். நன்றாகச் சுவாசிக்க முடிவதை உணர்கிறேன். இனி என் வேலைகளில் கவனம் செலுத்த முடியும்' என்று அவரிடம் கூறியது நினைவில் இருக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதி பன்னுன் மிரட்டல் : இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் போட்டிக்கு பலத்த பாதுகாப்பு



**ராஞ்சி : பிப். 22,**

**இந்தியா - இங்கிலாந்து இடையேயான 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, போட்டி நடைபெறும் ராஞ்சியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.**

இந்தியா - இங்கிலாந்து இடையேயான 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் உள்ள ஜே.எஸ்.சி.ஏ சர்வதேச ஸ்டேடியத்தில் நாளை முதல் தொடங்குகிறது. இப்போட்டியில் பங்கேற்க இங்கிலாந்து கிரிக்கெட் அணி நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை ராஞ்சி வந்தடைந்தது.

இந்நிலையில், மத்திய உள்துறை அமைச்சகத்தால் பயங்கரவாதி என அறிவிக்கப்பட்டுள்ள குர்பத்வந்த் சிங் பன்னுன், ராஞ்சியில் நடைபெறும் போட்டியை ரத்து செய்யுமாறு இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளை அச்சுறுத்தியுள்ளார்.

மேலும், போட்டியை ரத்து செய்யும் முயற்சியில் இடையூறுகளை உருவாக்குமாறு சிபிஐ (மாவோயிஸ்ட்) அமைப்பை வலியுறுத்தி அவர் வீடியோவும் வெளியிட்டுள்ளார். இதன் காரணமாக, ராஞ்சியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஹடியா டிஎஸ்பி-யான பி.கே.மிஸ்ரா செய்தியாளர்களிடம் கூறுகையில், "தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் கீழ் துர்வா காவல் நிலையத்தில் பன்னுன்மீதுஎஃப்ஐஆர்பதிவு செய்யப்பட்டு, விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் மற்றும் நாட்டின் பிற இடங்களில் அச்சுறுத்தல்களையும், பயங்கரவாதத்தையும் ஏற்படுத்தி வந்ததால் குர்பத்வந்த் சிங் பன்னுன் மீது கடந்த 2019-ல் தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) வழக்குப்பதிவு செய்தது. அதிலிருந்தே அவர் என்ஐஏ கண்காணிப்பில் உள்ளார்" என்றார்.

2021 பிப்ரவரி 3-ம் தேதி, என்ஐஏ சிறப்பு நீதிமன்றத்தால், பன்னுனுக்கு எதிராக ஜாமீனில் வெளிவர முடியாத கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. மேலும், அவர் கடந்த ஆண்டு நவம்பர் 29-ம் தேதி தலைமறைவு குற்றவாளியாகவும் அறிவிக்கப்பட்டார்.

அமெரிக்கா மற்றும் கனடாவை தளமாகக் கொண்டு செயல்படும் பன்னுனைச் சுற்றி தனது தடையை இறுக்கிய என்ஐஏ, செப்டம்பர் 2023-ல் பஞ்சாபின் அமிர்தசரஸ் மற்றும் யூனியன் பிரதேசத்தில் சட்டவிரோத சீக்கியர்களுக்கான நீதி (எஸ்எஃப்ஜே) அமைப்பின் சுய பாணியிலான பொது வழக்கறிஞரின் வீடு மற்றும் நிலத்தைபறிமுதல்செய்தது. தற்போதுபன்னுனைபிடிக்க அமெரிக்கா, கனடாவில் என்ஐஏ கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஐபிஎல் கிரிக்கெட் தொடர் மார்ச் 22-ல் தொடக்கம் : முதல் ஆட்டத்தில் சென்னை - குஜராத் அணிகள் மோதல்



**புதுடெல்லி : பிப். 22,**

**ஐபிஎல் டி 20 கிரிக்கெட் தொடரின் 17-வது சீசன் வரும் மார்ச் 22-ம்தேதி தொடங்கும் என ஐபிஎல் சேர்மன் அருண் துமால் தெரிவித்துள்ளார்.**

ஐபிஎல் டி 20 கிரிக்கெட் தொடரின் 17-வது சீசனுக்கான போட்டி அட்டவணை இன்னும் வெளியிடப்படவில்லை. இதற்கு காரணம் பொதுத்தேர்தல்தான். வரும் ஏப்ரல், மே மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த காலக்கட்டங்களில் தான் ஐபிஎல் டி 20 தொடரின் போட்டிகளை நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஐபிஎல் அட்டவணை அறிவிப்பதில் தாமதம் நிலவுகிறது.

இந்நிலையில் ஐபிஎல் சேர்மன் அருண் துமால் கூறும்போது, "ஐபிஎல் தொடரின் முதல் 15 நாட்களுக்கான அட்டவணை மட்டுமே அறிவிக்கப்படும், மீதமுள்ள போட்டிகளுக்கான அட்டவணை விவரம் பொதுத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னர் முடிவு செய்யப்படும்.

மார்ச் 22-ம் தேதி தொடரை தொடங்க வேண்டும் என திட்டமிட்டுள்ளோம். ஐபிஎல் போட்டி அட்டவணை தொடர்பாக அரசுத்துறைகளுடன் நெருக்கமாக பணியாற்றி வருகிறோம், முதலில் ஆரம்ப கட்ட போட்டிகளின் அட்டவணையை வெளியிடுவோம். முழு போட்டியும் இந்தியாவில் நடைபெறும்" என்றார்.

மக்களவைதேர்தலுக்கான அறிவிப்பு அடுத்த மாதத்தின் தொடக்கத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பின்னர் ஐபிஎல் தொடரின் முழு அட்டவணையும் வெளியாகும் என தெரிகிறது. 2009-ம் ஆண்டு ஐபிஎல் தொடர், பொதுத் தேர்தல் காரணமாக தென் ஆப்பிரிக்காவில் நடத்தப்பட்டது. இதன் பின்னர் 2014-ம் ஆண்டு தேர்தலையொட்டி ஐபிஎல் தொடரின் ஒரு பகுதி ஆட்டங்கள் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தப்பட்டது. இருப்பினும் 2019-ம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்ற காலங்களில் ஐபிஎல் தொடர் முழுவதுமே இந்தியாவில் நடத்தப்பட்டது.

இம்முறை வரும் ஜூன் 2-ம் தேதி ஐசிசி டி 20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் அமெரிக்கா மற்றும் மேற்கு இந்தியத் தீவுகளில் தொடங்குகிறது. இந்தத் தொடரில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் ஜூன் 5-ம் தேதி அயர்லாந்துடன் மோதுகிறது. டி 20 உலகக் கோப்பையை கருத்தில் கொண்டு ஐபிஎல் தொடரை மே மாதம் கடைசிக்குள் முடிக்கும் வகையில் போட்டி அட்டவணை தயாராகி வருகிறது. இதனால் ஐபிஎல் இறுதிப் போட்டி மே 26-ம் தேதி நடத்தப்படக்கூடும் என கூறப்படுகிறது.

ஐபிஎல் விதிமுறைகளின்படி கடந்த ஆண்டு இறுதிப் போட்டியில் விளையாடிய அணிகளே இம்முறை தொடக்க ஆட்டத்தில் மோத வேண்டும். இதன்படி மார்ச் 22-ம் தேதி சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நடப்பு சாம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணியுடன் பலப்பரீட்சை நடத்தக்கூடும் என கருதப்படுகிறது.

# இங்கிலாந்து ரசிகர்கள் ஓவர் ஆக்டிங் செய்து விமர்சிக்கின்றனர் - ஸ்வான் அதிருப்தி



**லண்டன் : பிப். 22,**

**இந்தியாவுக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து 1-2 என்ற கணக்கில் பின்தங்கி உள்ளது.**

இந்திய கிரிக்கெட் அணிக்கு எதிராக நடைபெற்று வரும் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் வென்ற இங்கிலாந்து ஆரம்பத்தில் முன்னிலை பெற்றது. ஆனால் 2-வது போட்டியில் 106 ரன்கள் வித்தியாசத்தில் தோற்ற அந்த அணி 3-வது போட்டியில் 434 ரன்கள் வித்தியாசத்தில் படுதோல்வியை சந்தித்தது.

இந்த 2 போட்டிகளிலும் பெரிய இலக்கை சேசிங் செய்த இங்கிலாந்து, சூழ்நிலைகளுக்கு தகுந்தாற்போல் விளையாடாமல் அதிரடியாக விளையாட முயற்சித்து தோல்வியை சந்தித்தது. எனவே 'பேஸ்பால்' எனப்படும் டெஸ்ட் கிரிக்கெட்டில் டி20 போல விளையாட நினைக்கும் இங்கிலாந்து அணியின் அதிரடியான அணுகுமுறை அந்நாட்டு ரசிகர்கள் மற்றும் முன்னாள் வீரர்களிடம் நிறைய விமர்சனங்களை எழுப்பியுள்ளது.

இந்நிலையில் பேஸ்பால் அணுகு முறையை பின்பற்றி கடந்த காலங்களில் நிறைய வெற்றிகளை பெற்றபோது அதை கொண்டாடிய இங்கிலாந்து ரசிகர்கள் தற்போது இந்தியாவுக்கு எதிராக 2 தோல்விகளை சந்தித்ததும் ஓவர் ஆக்டிங் செய்து விமர்சிப்பதாக முன்னாள் வீரர் கிரேம் ஸ்வான் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

எனவே நம்முடைய அணிக்கு தொடர்ந்து ஆதரவு கொடுக்க வேண்டும் என இங்கிலாந்து ரசிகர்களை கேட்டுக் கொள்ளும் அவர் இது குறித்து பேசியது பின்வருமாறு;- "ஆங்கிலேயர்களான நாம் இந்த தோல்விகளுக்காக ஓவர் ஆக்டிங் செய்கிறோம். இங்கிலாந்து விளையாடும் விதத்தில் நான் அதிக நம்பிக்கை கொண்டவன். அதை நீங்கள் பேஸ்பால் அல்லது எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம். ஆனால் கடந்த சில வருடங்களாக நாம் அந்த அணுகு முறையை பின்பற்றி நிறைய டெஸ்ட் போட்டிகளை வென்றுள்ளோம். எனவே சில தோல்விகளை சந்தித்ததால் மட்டும் அது மோசமானதாக மாறிவிடாது.

மூன்றாவது டெஸ்ட் போட்டி சொதப்பலாக முடிந்தது. இந்த நேரத்தில் நான் பென் ஸ்டோக்சுடன் உள்ளேன். அவர் இதுதான் எங்களுடைய பிராண்ட். இது அனைத்து நேரங்களிலும் வேலை செய்யாது. ஆனால் இதை நாங்கள் தொடர்ந்து பின்பற்றி விளையாடுவோம் என்று கூறியுள்ளார். எனவே அந்த அணுகுமுறையை பின்பற்றி பென் டக்கெட் அடித்த அபாரமான சதத்தை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். எனவே சில தோல்விகளுக்காக நாம் மோசமாக ஓவர் ரியாக்சன் செய்கிறோம் என்று நினைக்கிறேன்" என கூறினார்.

# "பெண்மையை இழிவுபடுத்தக் கூடாது" - த்ரிஷாவுக்கு ஆதரவாக ஜெயக்குமார் கருத்து



**சென்னை : பிப். 22,**

**"பெண்மையை இழிவுபடுத்தக் கூடாது. நடிகை த்ரிஷா மிகவும் மனம் வருந்தி அந்தப் பதிவை எழுதியிருக்கிறார். அந்த காணொலியில் பேசப்பட்ட விஷயங்களை கேட்கும்போதே அருவருப்பாக இருந்தது" என்று அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.**

யூடியூப் பேட்டி ஒன்றில் பேசிய சேலத்தை சேர்ந்த அதிமுகவின் முன்னாள் நிர்வாகி ஒருவர், கூவத்தூர் சம்பவம் குறித்து சில சர்ச்சையான கருத்துகளை பகிர்ந்தார். அதில் நடிகை த்ரிஷா குறித்து பேசிய கருத்துகள் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தின. அவர் பேசிய காணொலி சமூக வலைதளங்களில் வைரலானதை அடுத்து திரையுலகைச் சேர்ந்த பலரும் கண்டனம் தெரிவித்தனர். இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பேன் என்று நடிகை த்ரிஷா எச்சரித்ததையடுத்து, பகிரங்கமாக மன்னிப்புக் கோரி அந்த நபர் வீடியோ வெளியிட்டார்.

இந்த நிலையில், இந்த விவகாரத்தில் நடிகை த்ரிஷாவுக்கு அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் ஆதரவாக கருத்து தெரிவித்துள்ளார். சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், "பெண்மையை இழிவுபடுத்தக் கூடாது. நடிகை த்ரிஷா மிகவும் மனம் வருந்தி அந்தப் பதிவை எழுதியிருக்கிறார். அந்த காணொலியில் பேசப்பட்ட விஷயங்களை கேட்கும்போதே அருவருப்பாக இருந்தது.

அதிமுக பொதுச் செயலாளர் குறித்தும் அந்த நபர் வாய்க்கு வந்தபடி பேசியிருக்கிறார். நடிகை த்ரிஷா குறித்து அவர் பேசிய இழிவான கருத்துகள் என்பது மனித சமுதாயம் ஏற்றுக் கொள்ள முடியாத விஷயம். அவர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் மீதான நடவடிக்கை குறித்து கட்சி முடிவு செய்யும்" என்று தெரிவித்துள்ளார்.

# சிறந்த நடிகைக்கான தாதா சாகேப் பால்கே விருது வென்ற நயன்தாரா : குவியும் வாழ்த்து




**மும்பை : பிப். 22,**

**'ஜவான்' படத்தில் நடித்ததற்காக நடிகை நயன்தாராவுக்கு இந்த ஆண்டிற்கான 'தாதா சாகேப் பால்கே விருது' வழங்கப்பட்டுள்ளது. இந்தப் புகைப்படத்தை நடிகை நயன்தாரா பகிர்ந்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.**

விருதுகளும் அங்கீகாரமும் திரைக்கலைஞர்களுக்கு உற்சாகம் தரக்கூடிய ஒன்று. அப்படி இருக்கையில், மும்பையில் 2024 ஆம் ஆண்டுக்கான தாதா சாகேப் பால்கே சர்வதேச திரைப்பட விருதுகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை நடைபெற்றது. இதில் 'ஜவான்' படத்தில் நடித்ததற்காக, சிறந்த நடிகைக்கான விருதை நடிகை நயன்தாரா பெற்றார். இந்த விருதை அப்படத்தில் நடித்த நடிகர் ஷாருக்கான் அவருக்கு வழங்கினார். இந்தப் புகைப்படங்களை நடிகை நயன்தாரா தனது எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்து, 'தாதா சாகேப் பால்கே சர்வதேச திரைப்பட விருதுகள் விழாவில் 'ஜவான்' படத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகைக்கான விருது பெற்றுள்ளேன்' எனத் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

கோலிவுட்டில் 'லேடி சூப்பர் ஸ்டார்' எனப் பெயர் எடுத்தப் பின்பு பாலிவுட்டில் மாஸாக நயன்தாரா என்ட்ரி கொடுத்தப் படம்தான் 'ஜவான்'. அட்லி இயக்கத்தில் ஷாருக்கான் நடிப்பில் உருவான இந்தப் படத்தில் நடிகை நயன்தாரா நடித்திருந்தார். இந்தப் படம் கலவையான விமர்சனங்களைப் பெற்றிருந்தாலும், ஆயிரம் கோடிக்கும் அதிகமான வசூலைப் பெற்றிருந்தது. இந்தப் படத்தில் நடித்தற்காக சிறந்த நடிகைக்கான விருது பெறுவதற்காக நடிகை நயன்தாரா மும்பை சென்றிருந்த வீடியோக்கள் இணையத்தில் வைரலானது. இப்போது அவர் விருது வென்றுள்ளதற்கு ரசிகர்கள் தங்கள் வாழ்த்துகளைக் கூறி வருகின்றனர்.

வரலாறு உலகம்

# அசாதாரண சூழலால் வடக்கு காசாவில் உணவு விநியோகம் நிறுத்தம்



**பாலஸ்தீனம் : பிப். 22,**

**கடந்த அக்டோபர் 7 அன்று தொடங்கிய இஸ்ரேல்-ஹமாஸ் போர் 130 நாட்களுக்கும் மேலாக தொடர்கிறது.**

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் இஸ்ரேலிய ராணுவ படையினர், ஹமாஸ் அமைப்பினரை அழிக்க வான்வழியாகவும், தரை வழியாகவும் தாக்குதல் நடத்தி வருகிறது. மேலும், ஹமாஸ் அமைப்பினரின் வசம் உள்ள இஸ்ரேலிய பிணைக்கைதிகளை காசா பகுதி முழுவதும் அனைத்து இடங்களிலும் இஸ்ரேலிய ராணுவம் தேடி வருகின்றனர்.

இஸ்ரேல் விடுத்த எச்சரிக்கையை அடுத்து வடக்கு காசாவில் இருந்து மக்களில் பலர் கூட்டம் கூட்டமாக தங்கள் வீடுகளை விட்டு வெளியேறுகின்றனர். அங்கிருந்து செல்லாமல் தங்கிய மக்களுக்கு, ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுதிட்டம் எனும் சர்வதேச அமைப்பின் வழியாக உணவு வழங்கப்பட்டு வந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று வடக்கு காசாவில் உணவுகளை விநியோகிக்க சென்ற இந்த அமைப்பினரின் வாகனங்களை பசி மற்றும் வறட்சி காரணமாக காசா மக்கள் சூழ்ந்து கொண்டு உணவு பண்டங்களை சூறையாடினர். ஒரு சில இடங்களில் வாகன ஓட்டுனர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும் நடந்தன. இந்நிலையில், அங்கு நிலவும் அசாதாரணமான சூழலால், உணவு வழங்குவதை உலக உணவு திட்ட அமைப்பினர் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர்.


இது குறித்து உலக உணவு திட்ட அமைப்பு அறிவித்திருப்பதாவது: வடக்கு காசா பகுதியில் வன்முறையும், கட்டுப்பாடற்ற சூழலும் நிலவுகிறது. அங்கு சட்டம் ஒழுங்கற்ற நிலை உருவாகி விட்டது. உணவுக்காக கும்பல் கும்பலாக தாக்குதலில் ஈடுபடுகின்றனர். துப்பாக்கிச் சூடு மற்றும் உணவு களவாடப்படுதல் சம்பவங்கள் அதிகரித்து விட்டது.

பாதுகாப்பற்ற சூழலில் உள்ள மக்கள் சிறிது சிறிதாக பசி மற்றும் நோய் தாக்குதல் ஆகியவற்றால் தீவிர துன்பத்தை அனுபவிக்கின்றனர். உணவு விநியோகத்தில் ஈடுபடுபவர்களுக்கு பாதுகாப்பு கோரியுள்ளோம். விரைவில் விநியோகம் மீண்டும் தொடங்கப்படும் என்று அந்த அமைப்பு அறிவித்துள்ளது. வடக்கு காசாவில் உணவு, குடிநீர், மருந்து ஆகிய அத்தியாவசிய பொருட்களுக்கு கடும் பஞ்சம் நிலவுகிறது. இஸ்ரேலின் தொடர் தாக்குதல்களினால் பாலஸ்தீனத்தில் இதுவரை 28 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

# தென்கொரியாவில் 1,600 டாக்டர்கள் ராஜினாமா உரிய சிகிச்சை கிடைக்காமல் நோயாளிகள் அவதி

**சியோல் : பிப். 22,**

**தென்கொரியாவில் சுமார் 1 லட்சத்து 40 ஆயிரம் டாக்டர்கள் பணிபுரிகின்றனர். அங்குள்ள மக்கள்தொகையின்படி 10 ஆயிரம் பேருக்கு 25 டாக்டர்கள் என்ற நிலை உள்ளது.**



எனவே டாக்டர்களின் பற்றாக்குறையை தீர்க்க அரசாங்கம் முடிவு செய்தது. அதன்படி வருகிற கல்வியாண்டு முதல் மருத்துவ கல்லூரி மாணவர் சேர்க்கை 2 ஆயிரமாக உயர்த்தப்படும் என அரசாங்கம் அறிவித்தது. அரசின் இந்த அறிவிப்பால் டாக்டர்களின் பணிச்சுமை குறையும். அதேபோல் நோயாளிகளுக்கும் சிகிச்சை எளிதில் கிடைக்கும் என அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனால் அதற்கு நேர்மாறாக அரசின் இந்த மருத்துவ கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து டாக்டர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

அதாவது 2 ஆயிரம் பேரை கையாளக்கூடிய அளவுக்கு நம்மிடம் போதுமான மருத்துவ உள்கட்டமைப்பு வசதிகள் இல்லை. மேலும் அளவுக்கு அதிகமான டாக்டர்களை பணியமர்த்தும்போது தேவையற்ற சிகிச்சை மேற்கொள்ளும் சூழல் நிலவும் என டாக்டர்கள் தெரிவித்தனர்.

முக்கியமாக அதிகளவில் டாக்டர்கள் உருவாக்கினால் எதிர்காலத்தில் தங்களுக்கு சம்பளம் குறைய வாய்ப்பு இருப்பதாகவும் அவர்கள் அஞ்சுகின்றனர். எனவே அவர்கள் சாலையில் இறங்கி போராட்டம் நடத்தி வருகின்றனர். இதற்கிடையே போராட்டத்தின் ஒருபகுதியாக ஒரே நாளில் 1,600-க்கும் அதிகமான பயிற்சி டாக்டர்கள் ராஜினாமா செய்தனர். இதனால் அங்கு டாக்டர்கள் பற்றாக்குறை ஏற்பட்டது.

இதன் காரணமாக ஏராளமான ஆபரேசன்கள் ரத்து செய்யப்பட்டதால் நோயாளிகள் உரிய சிகிச்சை கிடைக்காமல் தவித்து வருகின்றனர். எனவே டாக்டர்கள் இந்த போராட்டத்தை உடனடியாக கைவிடும்படி தென்கொரிய சுகாதார அமைச்சகம் வலியுறுத்தி உள்ளது.

# மூளையில் சிப் பொருத்தப்பட்ட நபர் எண்ணங்களால் கம்ப்யூட்டர் மவுஸ்-ஐ இயக்குகிறார் – எலான் மஸ்க்

**அமெரிக்கா : பிப். 22,**

**நரம்பியல் நிலைமைகள் அல்லது அதிர்ச்சிகரமான காயங்கள் உள்ள மனிதர்களின் மூளைக்குள் சிப் பொருத்தி, அவர்களை இந்த பாதிப்பில் இருந்து மீட்க எலான் மஸ்க் 'நியூராலின்க்' என்ற நிறுவனத்தை தொடங்கினார்.**



இந்த நிறுவனம் மனிதர்களின் மூளையில் சிப் பொருத்தும் முதல் முயற்சியின் முதற்கட்ட சோதனை வெற்றிக்கரமாக நடந்து முடிந்திருப்பதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார். கழுத்து பகுதியில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக பக்கவாத பாதிப்புக்கு ஆளான நோயாளிகளின் மூளையில் சிப் பொருத்தப்படும். இதன்மூலம் அவர்களின் எண்ணத்தின் அடிப்படையில் கம்ப்யூட்டரின் கர்சர் மற்றும் கீபோர்டு உள்ளிட்டவைகளை கட்டுப்படுத்த முடியும்.

கடந்த 2016-ம் ஆண்டு இதற்கான பணிகள் தொடங்கப்பட்டது. பின்னர் இந்த திட்டத்தை மனிதர்களிடம் சோதனை செய்வதற்காக எலான் மஸ்க் அமெரிக்க அரசிடம் அனுமதி பெற்றிருந்தார். அதன்படி பக்கவாதம் பாதிக்கப்பட்டு, இந்த சோதனையில் ஈடுபட தேர்வு செய்யப்பட்ட முதல் நபரிடம் ஆய்வு தொடங்கப்பட்டது. அதன்படி கடந்த சில நாட்களுக்கு முன்பு இந்த சிப் முதன்முதலாக வெற்றிகரமாக மனிதரின் மூளையில் பொருத்தப்பட்டது.

சிப் பொருத்தப்பட்ட நபர் தற்போது குணமடைந்து வருகிறார் என்றும் அவரது எண்ணங்களை பயன்படுத்தி கம்ப்யூட்டர் மவுசை கட்டுப்படுத்துகிறார் என்றும் எலான்மஸ்க் தெரிவித்துள்ளார்.

# ரஷியாவை சமாளிக்க நீண்ட தூர ஏவுகணைகள் அதிகளவில் தேவை – உக்ரைன் பிரதமர்

**டோக்கியோ : பிப். 22,**

**ரஷியாவை சமாளிக்க, அமெரிக்காவின் புதிய ராணுவ உதவிகளை உக்ரைன் எதிர்பார்க்கிறது என்று உக்ரைன் பிரதமர் கூறினார்.**





உக்ரைன்-ரஷியா போர் கடந்த 2 வருடங்களாக தொடர்ந்து நடைபெறுகிறது. இதில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, பல ஐரோப்பிய நாடுகள் பொருளாதார உதவிகளை செய்து வருகின்றன. அவற்றின் உதவியால் போரில் உக்ரைன் தாக்குப்பிடித்து நிற்கிறது. இந்தநிலையில் போரால் உருக்குலைந்துள்ள உக்ரைனை மறுசீரமைப்பது தொடர்பான மாநாடு ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்றது.

இதில் உக்ரைன் பிரதமர் டெனிஸ் ஷ்மிஹால் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறுகையில், 'ரஷியாவுக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டு வர உக்ரைனுக்கு நீண்ட தூர ஏவுகணைகள் மற்றும் வெடிமருந்துகள் அதிகளவில் தேவைப்படுகிறது. அதேசமயம் ஆயுத ஏற்றுமதி கொள்கையில் ஜப்பானின் கட்டுப்பாடுகளை உக்ரைன் புரிந்து கொள்கிறது. எனவே அமெரிக்காவின் புதிய ராணுவ உதவிகளை உக்ரைன் எதிர்பார்க்கிறது' என அவர் தெரிவித்தார்.

# ரஷ்யா – உக்ரைன் யுத்த களத்தில் போரிட கட்டாயப்படுத்தப்படும் இந்தியர்கள்

**மாஸ்கோ : பிப். 22,**

**ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு இடையிலான போரில் போரிட இந்தியர்கள் கட்டாயப்படுத்தப்படுவதாக அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. ரஷ்ய ராணுவம் சார்பில் 'ராணுவ உதவியாளர்கள்' என பணியமர்த்தப்பட்ட இந்தியர்கள் எல்லைப் பகுதியில் துப்பாக்கி ஏந்தி போரிட வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகி உள்ளனர்.**



ரஷ்யா உக்ரைன் இடையிலான போர் கடந்த 2022 பிப்ரவரியில் தொடங்கியது. இதில் உக்ரைன் ராணுவத்துக்கு ஆதரவாக பல்வேறு நாடுகளை சேர்ந்த தன்னார்வலர்கள், உக்ரைனின் பிராந்திய பாதுகாப்புக்கான சர்வதேச படையில் அங்கம் வகித்து வருகின்றனர். இந்நிலையில், ரஷ்ய தரப்பில் இந்தியர்கள் சிலர் எல்லையில் போரிட்டு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. இவர்கள் உத்தர பிரதேசம், குஜராத், பஞ்சாப், ஜம்மு காஷ்மீர் பகுதியை சேர்ந்தவர்கள்.

ஆயுதம் மற்றும் வெடிமருந்து பயன்பாடு குறித்த அடிப்படை பயிற்சியை ரஷ்ய ராணுவம் தங்களுக்கு வழங்கி, உக்ரைன் நாட்டை ஒட்டியுள்ள எல்லைப்பகுதியான Rostov-on-Don பகுதியில் உள்ள முகாமில் கடந்த ஜனவரி மாதம் முதல் பணியமர்த்தி உள்ளதாக பாதிக்கப்பட்ட இந்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

2023 நவம்பரில் ரஷ்யா சென்ற இந்தியர்கள் ராணுவ உதவியாளர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். மாதம் ரூ.1.95 லட்சம் ஊதியம் மற்றும் ரூ.50,000 போனஸ் என அவர்களிடம் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருந்தும் முதல் இரண்டு மாதத்துக்கான ரூ.50,000 போனஸ் மட்டும் அவர்கள் பெற்றுள்ளனர். 'பாபா வி-லாக்ஸ்' எனும் யூடியூப் சேனல் நடத்தி வரும் ஃபைசல் கான் மூலம் அவர்கள் ரஷ்யா வந்துள்ளனர். அவர்களை ரஷ்யாவில் வரவேற்றதும் ஃபைசலின் சார்பாக வந்திருந்த இரண்டு இந்திய முகவர்கள்தான்.

கடந்த ஆண்டு நவம்பர் 13-ம் தேதி ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இருந்து சுமார் இரண்டரை மணி நேர பயணத்துக்கு பிறகு ராணுவ முகாம் ஒன்றுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். உதவியாளர்களாக தான் பணி என இந்திய முகவர்கள் அவர்களிடத்தில் உறுதி அளித்துள்ளனர். அங்கு தங்கியிருந்த அவர்களுக்கு ஆயுத பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ஜனவரி 4-ம் தேதி அன்று அவர்கள் எல்லைப்பகுதிக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். அப்போது முதல் அவர்கள் அங்கேயே இருந்து வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட இந்தியர்களில் ஒருவர் அங்கிருந்து தப்பிக்க முயன்றுள்ளார். இருந்தும் அவரை பிடித்த ரஷ்ய படையினர், மிரட்டல் கொடுத்து போரிட சொல்லி பணித்துள்ளனர். '5 மீட்டர் இடைவெளி விட்டு நடந்தால் குண்டு தாக்குதலில் இருந்து தப்பிக்கலாம் என ராணுவ அதிகாரி சொல்வார். நாங்களும் அப்படியே நடந்தோம். எங்களுக்கு வழிகாட்டியாக வந்த உள்ளூரை சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். அதை பார்த்ததும் நான் அதிர்ச்சி அடைந்தேன். கடந்த ஜனவரி 22-ம் தேதி யுத்தக் களத்தில் இருந்து தப்பி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை பெற்று வருகிறேன். உதவிக்காக இந்திய தூதரகத்தை அணுகினாலும் பலன் இல்லை' என பாதிக்கப்பட்ட ஒருவர் தெரிவித்துள்ளார்.


"இந்தியர்கள் மட்டுமல்லாது மற்ற நாடுகளை சேர்ந்தவர்களும் எல்லையில் போரிட வேண்டிய நிர்பந்தத்துக்கு ஆளாகி உள்ளனர். அவர்களது பாஸ்போர்ட் பறிக்கப்பட்டுள்ளது. அவர்களின் உயிர் அச்சுறுத்தலில் உள்ளது. ராணுவ உதவியாளர்கள் என சொல்லி ரஷ்ய படையினர் இப்படி செய்துள்ளனர்" என்கிறார் ரஷ்யாவில் உள்ள முகவர் (ஏஜெண்ட்) ஒருவர்.

இந்த புகார் குறித்து முறையாக ஃபாலோ செய்து வருவதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், ஏஐஎம்ஐஎம் கட்சியின் தலைவரும், ஹைதராபாத் எம்.பி.யுமான அசதுத்தீன் ஒவைசி, ரஷ்யாவில் பாதிக்கப்பட்டுள்ள இந்தியர்கள் நாடு திரும்ப அரசு உதவ வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சரிடம் அவர் கோரிக்கை வைத்துள்ளார். பாதிக்கப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்கள் அவரை அணுகியதாகவும் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் கூட்டணி அரசு அமைக்க ஒப்பந்தம் ஷெபாஸ் ஷெரீப் பிரதமர் வேட்பாளர்

**லாகூர் : பிப். 22,**

**பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் கட்சியை சேர்ந்த ஷெபாஸ் ஷெரீப்பை, பிரதமர் வேட்பாளராக அறிவிக்க முடிவாகி உள்ளது.**





பொருளாதார சரிவால் பெரும் பின்னடைவை சந்தித்துள்ள பாகிஸ்தான் நாட்டில் கடந்த 8-ந்தேதி பொது தேர்தல் விறுவிறுப்பாக நடந்து முடிந்தது. உடனடியாக வாக்கு எண்ணிக்கையும் தொடங்கி நடந்தது. தேர்தல் முடிவுகள் அறிவிப்பதில் சிறிது தாமதம் ஏற்பட்டது. ஆனால் அதன் முடிவில், எந்த கட்சிக்கும் மெஜாரிட்டி கிடைக்கவில்லை.

இந்த சூழலில், இரண்டு வாரங்கள் ஆகியும், அந்நாட்டில் எந்த கட்சியும் ஆட்சியமைக்காத நிலை காணப்படுகிறது. சிறையில் உள்ள முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான்-தெஹ்ரீக்-இன்சாப் (பி.டி.ஐ.) கட்சியின் ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளர்கள் தேர்தலில் அதிக அளவில் (92 இடங்கள்) வெற்றி பெற்றனர். எனினும், அவர்கள் ஆட்சியமைக்க முடியாத சூழலே உள்ளது.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் கட்சி (79 இடங்கள்), பாகிஸ்தான் மக்கள் கட்சி (54 இடங்கள்) அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இதனால், பொருளாதார ஸ்திரத்தன்மையற்ற சூழலில், நாட்டில் ஒரு வலிமையான அரசை அமைப்பதற்கான முயற்சியில் அந்த இரு கட்சிகளும் இறங்கின. கூட்டணி அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளும் நடந்தன. அதில் பலன் கிடைத்துள்ளது.

கூட்டணி அரசு அமைக்க பாகிஸ்தான் மக்கள் கட்சியின் (பி.பி.பி.) முக்கிய தலைவரான ஆசிப் அலி சர்தாரி ஒப்புதல் அளித்துள்ளார். இரு கட்சிகளின் தலைவர்களும் அரசை அமைப்பதற்காக மீண்டும் கைகோர்க்க முடிவு செய்து, அதனை உறுதி செய்துள்ளனர். தேசத்தின் சிறந்த நலனுக்காக, என கூறி அவர்கள் கூட்டணி அரசை அமைக்க ஒப்புதல் அளித்துள்ளனர்.

இதனால், முன்னாள் பிரதமரான ஷெபாஸ் ஷெரீப் (வயது 72) புதிய பிரதமராகவும், முன்னாள் அதிபரான சர்தாரி (வயது 68) நாட்டின் புதிய அதிபராகவும் வரக்கூடும். அதற்கேற்ப இருவரையும் அதற்கான வேட்பாளராக பிலாவல் பூட்டோ உறுதிப்படுத்தி உள்ளார். முதல் நாளில் இருந்து பிலாவல் தலைமையிலான கட்சி, மந்திரி பதவி எதனையும் கேட்கவில்லை என்று ஷெபாஸ் ஷெரீப் கூறியுள்ளார்.

சர்தாரி, 2008 முதல் 2013 வரையிலான ஆண்டுகளில் ஜனாதிபதியாக பதவி வகித்தவர். இதனால், இரு கட்சிகளும் கூட்டணி அரசை அமைத்து பொருளாதார பாதிப்பில் சிக்கி தவிக்கும் நாட்டை மீட்டெடுக்கும் பணியை மேற்கொள்ள முடிவு செய்துள்ளன.

# இஸ்ரேல்-காசா போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் இளவரசர் வில்லியம்ஸ் வலியுறுத்தல்

**பிரிட்டன் : பிப். 22,**

**காசா போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று வேல்ஸ் இளவரசர் வில்லியம் வலியுறுத்தி உள்ளார். பொதுவாக அரச குடும்பத்தை சேர்ந்தவர்கள் அரசியல் நிகழ்வுகள் குறித்து கருத்து தெரிவிக்காமல் இருப்பது வழக்கமாக இருந்து வந்தது.**



இந்த நிலையில், 41 வயதான வேல்ஸ் இளவரசர் வில்லியம் மத்திய கிழக்கு பகுதியில் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக பொது மக்கள் பாதிக்கப்பட்டு வருவதை அடுத்து இந்த விவகாரத்தில் தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், "கடந்த ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி ஹமாஸ் மத்திய கிழக்கில் நடத்திய தாக்குதல் மற்றும் அதன் பிறகு அங்கு நடைபெறும் சம்பவங்களால் மனித குலம் எதிர்கொள்ளும் இழப்புகளை கண்டு பெரிதும் வருந்துகிறேன். இதில் பலர் கொல்லப்பட்டு விட்டனர்."

"நான், மற்றவர்களை போன்றே, இந்த சண்டை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றே நினைக்கிறேன். காசாவிற்கு மனிதாபிமான உதவிகள் அதிகளவில் தேவைப்படுகிறது. உதவிகள் அதிவேகமாக சென்றடைய வேண்டியதும், பணயக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டியதும் அவசியம் ஆகும்," என்று குறிப்பிடப்பட்டு உள்ளது.

# அதிபர் கொலை சதி திட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அவரது மனைவி





**ஹைதி : பிப். 22,**

**கரீபியன் கடற்பகுதியில் உள்ள தீவு நாடு, ஹைதி. இதன் தலைநகரம் போர்ட்-ஆ-ப்ரின்ஸ். கடந்த 2021 ஜூலை 7 அன்று அந்நாட்டு அதிபர் ஜோவெனல் மாய்ஸ், போர்ட்-ஆ-ப்ரின்ஸ் பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் ஓய்வெடுத்துகொண்டிருந்தார்.**

அப்போது ஆயுதமேந்திய சிலர் உள்ளே அத்துமீறி நுழைந்து அதிபர் ஜோவெனலை சுட்டுக் கொன்றனர். இந்த தாக்குதலில் அதிபர் ஜோவெனல் மாய்சின் மனைவி மார்டினே மாய்ஸ் காயமடைந்தார். அதிபர் படுகொலை விசாரணையில் இதில் 50க்கும் மேற்பட்டோருக்கு தொடர்பிருப்பதாக கைது செய்யப்பட்டனர்.

இந்த குற்றப்பத்திரிகையில், அதிபரின் மனைவி மார்டினே மாய்ஸ் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது. குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டதாவது: சம்பவம் நடந்த பிறகு அதிபரின் மனைவி கொடுத்துள்ள வாக்குமூலத்தில் பல அம்சங்கள் முன்னுக்கு பின் முரணாக உள்ளது.


மேலும், அதிபர் மாளிகையில் இருந்த செயலர், இச்சம்பவம் நடப்பதற்கு 2 நாட்களுக்கு முன் அங்கு வந்த மார்டினே சுமார் 5 மணி நேரம் அங்கிருந்து, சில முக்கிய பொருட்களை அப்புறப்படுத்தி உள்ளதாக கூறியுள்ளார். மார்டினே, ஜோவெனல் உயிரிழந்ததும், தான் அதிபராக பதவியேற்க திட்டமிட்டு, முன்னாள் பிரதமர் க்ளாட் ஜோசப் மற்றும் சிலருடன் இணைந்து சதி செய்து தனது கணவரை கொலை செய்துள்ளார்.

இவ்வாறு குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. க்ளாட் ஜோசப் பெயரும் இதில் இணைக்கப்பட்டுள்ள நிலையில், அவர் இந்த குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார். "அதிபர் படுகொலையினால் பலனடைந்திருப்பது தற்போதைய பிரதமர் ஏரியல் ஹென்றி என்றும், அவர் நீதித்துறையை ஆயுதமாக்கி தனது அரசியல் எதிரிகளை பழி வாங்குவதாகவும்" என க்ளாட் ஜோசப் குற்றம் சாட்டினார். மாய்ஸ் உயிரிழந்த 2 வாரங்களில் அதிபராக பதவியேற்ற ஹென்றி, இந்த குற்றச்சாட்டுகளை "பொய் செய்தி" என மறுத்துள்ளார்.

# பெற்ற குழந்தைகளையே துன்புறுத்திய யூடியூபருக்கு 60 வருட சிறை

**அமெரிக்கா : பிப். 22,**

**மேற்கு அமெரிக்காவில் உள்ள மாநிலம், உடா. இதன் தலைநகரம் சால்ட் லேக் சிட்டி. உடா மாநிலத்தில், 42 வயதான ரூபி ஃப்ராங்கி எனும் பெண், தனது குழந்தைகளுடன் வசித்து வந்தார்.**



கடந்த 2015ல் ரூபி, யூடியூப் வலைதளத்தில் குழந்தைகளை வளர்ப்பது தொடர்பான வீடியோக்களை உருவாக்கி பகிர்ந்து கொண்டார். இந்த வீடியோ உருவாக்கத்தில் அவரது குழந்தைகளையும் அவர் பங்கெடுக்க செய்தார். "8 பாசஞ்சர்ஸ்" எனும் அவரது யூடியூப் சேனலுக்கு குறுகிய காலத்திலேயே 2 மில்லியன் பயனர்கள் சேர்ந்தனர்.

2020 காலகட்டத்தில் அவரது மகன்களில் ஒருவர் தனக்கு நேரும் துன்புறுத்தலை குறித்து ஒரு வீடியோ பதிவு செய்திருப்பதை ஒரு பயனர் கண்டு, ரூபியின் முந்தைய வீடியோக்களை கவனமாக ஆய்வு செய்தார். அதில் ரூபி தனது குழந்தைகளை "கட்டுப்பாடு" எனும் பெயரில் துன்புறுத்தும் சான்று கிடைத்தது.

இதனை தொடர்ந்து ரூபியை விசாரிக்க உடா மாநில குழந்தைகள் நல அதிகாரிகளிடம் மனுக்கள் அளிக்கப்பட்டன. குற்றச்சாட்டுகளை மறுத்த ரூபி, 2022ல் தனது யூடியூப் சேனலை நிறுத்தி விட்டார். ரூபியும், அவரது கணவரும் பிரிந்தனர். தொடர்ந்து "ஜோடி ஹில்டெப்ராண்ட்" என்பவரின் "கனெக்ஷன்ஸ் க்ளாஸ்ரூம்" எனும் சேனலில் ரூபி தனது வீடியோக்களை பதிவேற்றினார்.

2022ல் அவரது 12-வயது மகன் ஒருவன் வீட்டை விட்டு தப்பி, அண்டை வீட்டாரிடம் உணவு கேட்கும் போது அவன் உடலெங்கும், பல காயங்கள் இருப்பதும், அவை அச்சிறுவனை பலமாக கயிற்றினால் கட்டி வைத்ததால் ஏற்பட்டவை என்பதும் தெரியவந்தது. இதனை தொடர்ந்து அதிகாரிகளுக்கு தகவல் அளிக்கப்பட்டு, அவர்களும், காவல்துறையினரும் விரைந்து வந்து ரூபியின் வீட்டை ஆய்வு செய்தனர்.

அங்கு அவர்களுக்கு ரூபி தனது குழந்தைகளுக்கு உணவு, குடிநீர் வழங்காமல் சித்திரவதை செய்ததற்கான தடயங்கள் காவல் அதிகாரிகளுக்கு கிடைத்தது. இதனை தொடர்ந்து விசாரணை நடைபெற்று, ரூபி ஃப்ராங்கி மற்றும் அவரது தொழில் கூட்டாளி ஹில்டெப்ராண்ட்" (54) ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது, நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது.

விசாரணையின் போது நீதிமன்றத்தில் உடா மாநில அரசு தரப்பு வழக்கறிஞர், "ஃப்ராங்கியின் குழந்தைகள் நாஜி படையினர் நடத்திய சித்திரவதை கூடங்களை போன்ற சூழலில் வீட்டில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு உணவு, குடிநீர், படுக்கை, பொழுதுபோக்கு என அனைத்தும் மறுக்கப்பட்டு வந்தது" என தெரிவித்தார். இந்நிலையில், அவர்கள் இருவருக்கும் தலா 60 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

# லிபியாவில் அகதிகள் படகு கவிழ்ந்து 9 பேர் பலி

**டாக்கா : பிப். 22,**

**படகு கவிழ்ந்ததில் வங்காளதேச நாட்டை சேர்ந்த 8 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர்.**

அரசியல் ஸ்திரத்தன்மையற்ற லிபிய நாட்டின் கடற்கரையில் இருந்து ஐரோப்பாவுக்கு சிலர் படகு ஒன்றில் பயணம் மேற்கொண்டனர். அந்த படகில் பாகிஸ்தான், எகிப்து, சிரியா மற்றும் வங்காளதேச நாட்டை சேர்ந்தவர்களும் பயணித்து உள்ளனர். ஐரோப்பாவுக்கு சென்று விட்டால் நல்ல வேலை மற்றும் வாழ்க்கை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் சென்றுள்ளனர். ஆனால், அவர்களுக்கு துரதிர்ஷ்டமே காத்திருந்தது.

மத்திய தரைக்கடல் வழியே சென்ற அந்த அகதிகளின் படகு துனீசியா கடலோர பகுதியில் திடீரென கவிழ்ந்து விபத்திற்குள்ளானது. படகில் 53 பேர் இருந்தனர் என கூறப்படுகிறது. பலரின் நிலைமை என்னவென தெரியவில்லை. இதுபற்றி வங்காளதேச அரசு நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை வெளியிட்ட செய்தியில், வங்காளதேச நாட்டை சேர்ந்த 8 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர் என தெரிவித்து உள்ளது. இதனை அந்நாட்டு வெளிவிவகார துறை உறுதிப்படுத்தியது.

அவர்களில் 5 பேர் வங்காளதேச நாட்டின் மதரிப்பூர் மற்றும் 3 பேர் கோபால்கஞ்ச் மாவட்டங்களை சேர்ந்தவர்கள் ஆவர். உயிரிழந்த வங்காளதேச நாட்டை சேர்ந்த 8 பேர் மற்றும் பாகிஸ்தானியர் ஒருவரின் உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. தொடர்ந்து மீட்பு பணி நடந்து வருகிறது.

# தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு ; சிபிஐ மேல் விசாரணை நடத்தி வருகிறது ; தமிழக அரசு





# எண்ணூர் உரத் தொழிற்சாலையில் வாயு கசிவு ரூ.6 கோடி இழப்பீடு கேட்டு நோட்டீஸ்

# சைக்கிள் சின்னம் எங்களுக்கே : தேர்தல் ஆணையத்தை எதிர்த்து ஜி.கே.வாசன் வழக்கு




| | | | | |
|---|---|---|---|---|
| சென்னை / புதுக்கோட்டை | 22.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |

புதுகை

# வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

தில்லையாடி வள்ளியம்மை , இந்திய விடுதலைப் போராட்டப் பெண் போராளி (பி.1898) (இ.1914)



சுப்பையா சர்வானந்தா , இலங்கைத் தமிழ் நீதிபதி, வழக்கறிஞர், மேல்மாகாணத்தின் 1வது ஆளுநர் (பி.1923) (இ.2007)



சாலமன் பாப்பையா , தமிழறிஞர், பட்டிமன்ற நடுவர், பேச்சாளர் (பி.1936)



சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் , இலங்கைத் தமிழ்க் கல்வியாளர் (பி.1951)



## இன்றைய நினைவு நாள்

கஸ்தூரிபாய் காந்தி , மகாத்மா காந்தியின் மனைவி (பி.1869) (இ.1944)



அபுல் கலாம் ஆசாத் , இந்திய அரசியல்வாதி (பி.1888) (இ.1958)



வ. அ. இராசரத்தினம் , ஈழத்து எழுத்தாளர் (பி.1925) (இ.2001)

